வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 269 | பக்கங்கள் : 20


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


07 சீன தூதர் தரும் சொக்லெட்டை மகிழ்ச்சியுடன் சுவையுங்கள் ஆனால், ஆன்மாவை விற்றுவிடாதீர்கள்


08 நீதிமன்ற அவமதிப்பும் ஜனாதிபதிகளின் மன்னிப்பும்


10 இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணம் எப்போது வரும்?


11 'பட்ஜெட்'டும் மக்கள் கருத்தும்

## நள்ளிரவு நாடு திரும்பிய கோட்டாவுக்கு ரணில் அரசின் முழுமையான பாதுகாப்பு

கொழும்பு, செப். 04

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கியுள்ளது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு.



மீண்டும் நாடு திரும்பியுள்ள கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை அரசு வழங்கியுள்ளது என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் மாபெரும் எதிர்ப்புப் போராட் 19

## பாணின் விலை யாழில் உயராது

யாழ்ப்பாணம், செப். 04

அதிக விலைக்கு பாண் விற்கும் பேக்கரி உரிமையாளர்களுக்கான சலுகைகள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என யாழ்.மாவட்டக் கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்,

யாழ்.மாவட்டத்தில் பாண் விலை அதிகரிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 19

## மீண்டும் அரசியல் பிரவேசம்: கோட்டாவே தீர்மானிப்பாராம்

### சொல்கின்றார் மகிந்த ராஜபக்‌ஷ

கொழும்பு, செப்..04

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மீண்டும் அரசியலில் ஈடுபடுவது தொடர்பில் அவரே சிறந்த முடிவை எடுப்பார் என்று முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ தெரிவித்தார். 19

## கோட்டாவுக்குத் தேவையான வசதியை வழங்கத் தீர்மானம்

### ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.04

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளின் கீழ் கோட்டாபய ராஜபக்சவுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க 19

## கோட்டாவைப் பாதுகாப்பது அரசின் மிகமுக்கிய கடமை!

### பிரதமர் தினேஷ் கூறுகின்றார்

கொழும்பு, செப். 04

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் கோட்டாபய ராஜபக்‌ஷவைப் பாதுகாப்பது அரசின் கடமை என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மீண்டும் நாடு 19

## கூட்டமைப்பின் பங்காளி ரெலோ ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சு!

- தமிழ் மக்களுக்கான தீர்வு
- அரசியல் கைதிகள் விடுதலை
- காணிகள் அபகரிப்பு
- இராணுவ பிரசன்னம்
- காணாமற்போனோர் விவகாரம்
- மீனவர் பிரச்னை

### ஆகிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்வு உடனடி நடவடிக்கை எடுப்பதாக ரணில் உறுதி

கொழும்பு, செப். 04

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ நேற்று சந்தித்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.**



தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம், காணிகள் அபகரிப்பு, இராணுவப் பிரசன்னம், மீனவர் பிரச்னை உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ரெலோ சுட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக ஜனாதிபதி ரணில் 19

## கோட்டாபய மீளவும் அரசியலுக்கு வர குடும்ப உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, செப். 04

நாடு திரும்பிய முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்‌ஷ அரசியலுக்கு மீண்டும் வருவதற்கு ராஜபக்‌ஷ குடும்பத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்கு வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து பிரதமராக நியமிக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மகிந்த ராஜபக்‌ஷ தலைமையிலான கோட்டாவின் குடும்ப உறுப்பினர் 19

## இலங்கைக்காக ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயார்!

### சீன வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 04

இலங்கைக்கு ஆதரவளிக்க ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படத் தயார் என சீனா அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், இலங்கையுடன் கடன் ஒப்பந்தத்தை எட்டியுள்ள நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து அனைத்து கடன் வழங்குநர் நாடுகளுடன் கலந்துரையாட ஒன்றிணையுமாறு ஜப்பானிய நிதி அமைச்சர் நேற்று முன்தினம் மீண்டும் வலியுறுத்தினார்.

இதற்கமைய, சீனா மற்றும் இந்தியா உட்பட 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது!

இந்தா வருகிறார், அந்தா வருகிறார் என்று கூறப்பட்டுவந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

அவர் வருகிறார் என்றதும் அவரை மீண்டும் அரசியலில் உள்ளீர்க்க சிலர் பகீரதப்பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றனர்.

அவரை தமது பக்கம் இணைத்துக்கொள்ள விமல் - கம்மன்பில அணியினர் தீவிர முயற்சி செய்துகொண்டிருக்க, அதனை தடுக்கும் விதமாக அவரை தம்பக்கம் இழுக்க பொதுஜன முன்னணி முயன்றுகொண்டிருப்பதாக மற்றுமொரு தரப்பு செய்திகளை வெளியிட்டது.

இதுகுறித்து இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் எழுதியிருந்தோம்.

ஆனால் இப்போது அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்த தகவல்கள் முற்றிலும் வேறுவிதமானவை.

அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். சிறந்த நிர்வாகி என்ற பெயரைப் பெற்றிருந்தாலும், ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பது என்பதும் ஒரு நாட்டை அரசியல் ரீதியாக நிர்வகிப்பது என்பதும் வேறுவேறானவை என்பதை அவரே இப்போது புரிந்துகொண்டிருப்பார்.

பொதுஜன முன்னணி என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்ட அடுத்த தேர்தலிலேயே ஆட்சியைப்பிடிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தியது யுத்த வெற்றி என்ற கோஷத்தை என்பது இரகசிமானதல்ல. மைத்திரி- ரணில் ஆட்சியில் அவர்கள் இருவருக்குமிடையே நடந்துவந்த தனிப்பட்ட 'ஈகோ' பிரச்னையில் நாடு அல்லோலகல்லோலப்பட்டதும், போதாக்குறைக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் கோட்டாபய போன்ற ஒருவரின் தேவையை சிங்கள மக்களுக்கு உணர்த்தியது.

அதுவே அவர்களின் மாபெரும் வெற்றிக்கு காரணமுமாகியது. ஆனால், இன்று கோட்டாபய ஒரு சிறந்த நிர்வாகியாக இருந்தாலும், அரசியல் தெரியாவிட்டால் மக்களின் ஆதரவு இருந்தாலும் ஒருவரால் சிறப்பான ஆட்சியை வழங்கமுடியாது என்பதை மக்களும் நாடும் இன்று நன்றாகவே அறிந்துவிட்டது.

இந்த செய்தியை - அதாவது அவர் மீண்டும் அரசியலுக்கு வருவாரா என்று கொழும்பில் ஓர் ஊடகரிடம் கேட்டேன். அவர் கோட்டாபயவுடன் நெருக்கமான ஒருவர். அவர் சொன்னார், 'அரசியல் தெரியாமல் அரசியலுக்கு வந்ததால், அவர்,அவரை ஆதரித்த மக்களாலேயே வெறுக்கப்படுவார் என்பதற்கு இன்று உலகத்திலேயே ஒரு 'றோல்மொடல்' என்றால் அது அவர்தான். அப்படியிருக்கையில் அவர் மீண்டும் அரசியலுக்கு வருவார் என்று நான் நம்பவில்லை' என்றார்.

விமல் வீரவன்ச அணியினர் அவரை மீண்டும் அரசியலுக்கு கொண்டுவர முயற்சி செய்கிறார்களாமே என்று அவரிடமே திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்,

"அவர்கள் இனி தனியாக எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் காணாமல்போய்விடுவார்கள். அதனால்தான் மீண்டும் ஒரு பலமான சிங்கள முகம் அவர்களுக்கு தேவைப்படுகின்றது. ஆனால் அவர்களின் விருப்பத்தை கோட்டாபய தீர்த்துவைப்பார் என்று நான் நினைக்கவில்லை'" என்றார் அவர்.

அவரை ஆதரித்த சில சிங்கள கடும் கோட்பாளர்களுக்கு தாம் தோற்றுவிட்டோமே என்ற குற்ற உணர்வு இருந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆனால் இனியும் அதேமுகத்தோடு, அதாவது கடும் சிங்கள கோட்பாட்டு முகத்தோடு அரசியல் செய்யமுடியாது என்பதை அவர்களே உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்றே நம்புகின்றோன் என்று அந்த ஊடகர் சொன்னபோது அந்தக் கருத்துடன் உடன்பட முடியவில்லை.

அடுத்த தேர்தலில் சிறுபான்மை மக்களின் ஆதரவை ஒட்டுமொத்தமாக பெறவேண்டும் என்று நினைக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாசா கூட, ஜெனீவாவில் இலங்கை அரசு நெருக்கடியை எதிர்கொள்ளும்போது தான் அரசாங்கத்தை பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவேன் என்று சொல்கின்றார் என்றால், அவர் சிங்கள கடும்கோட்பாளர்களின் ஆதரவையும் இழந்துவிடக்கூடாது என்பதில்தானே குறியாக இருக்கிறார் என்ற என் சந்தேகத்தை அவரிடம் கேட்டபோது அவரால் பதில் செல்ல முடியவில்லை.

ஆக, யார் என்ன சொன்னாலும் சிங்கள மக்களின் வாக்குகளுக்காக சிங்கள தேசியவாதிகளின் சொல்வாக்கு முற்றாக இல்லாமல் போய்விட்டது என்பதெல்லாம் கற்பனைதான்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக அது காணாமல் போகவில்லை. பழுதடையாமல் குளிர்சாதனப்பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான். பொருளாதார நிலைமை சரியான பின்னர், மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படும். அது சஜித்துக்கும் கூட தெரிந்திருக்கின்றது!.

- ஊர்க்குருவி

# இவ்வாண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம்!

கொழும்பு, செப். 04

கடந்த வருடங்களில் பதிவான டெங்கு நோயாளர்களை விட இவ்வாண்டு பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு காய்ச்சல் குழந்தைகள் மத்தியில் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி. விஜேசூரிய எச்சரித்துள்ளார்.

இவ்வாண்டு இதுவரை 43,393 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். ஜூலை மாதத்தில் மாத்திரம் 11,119 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# 22 ஆவது திருத்தம் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணி

## சுட்டிக்காட்டுகின்றார் கரு ஜயசூரிய

கொழும்பு, செப். 04

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் இலங்கையின் எதிர்காலத் திசையை தீர்மானிக்கும் முக்கிய காரணி என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த முயற்சிக்கு அனைத்து உறுப்பினர்களும் தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அதன் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கேட்டுக்கொண்டார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்து அதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரம்பற்ற மற்றும் தன்னிச்சையான அதிகாரங்களை நீக்குவதே முதற் கடமை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதில் மக்கள் பிரதிநிதிகள் எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே அவர்களின் எதிர்காலமும் தங்கியிருப்பதாகவும் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி ரணிலின் முயற்சியை பாராட்டுகிறார் போரிஸ் ஜோன்சன்

லண்டன், செப். 04

இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு முன்னுரிமையளிக்கும், அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளுக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை மீதான பிரித்தானிய அரசாங்கத்தின் கரிசனையை மீளவலியுறுத்தியுள்ள பிரதமர் போரிஸ் ஜோன்சன், தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக சவால்களுக்கு மத்தியில், பிரித்தானியா, இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்பதோடு இலங்கைக்கு உதவ சர்வதேச பங்குதாரர்களுடன் பிரித்தானியா இணைந்து செயற்பட காத்திருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். (அ)

# நாட்டின் அரசியல் உறுதியற்ற தன்மை நிவாரணத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்!

கொழும்பு, செப். 04

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் உறுதியற்ற தன்மை, சர்வதேச நாணய நிதியத்தால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும்போதும் பாதிப்பை ஏற்படுத்தும் என தரமதிப்பீட்டு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்பைத் தடுப்பதற்காக அரசாங்கம் சமூகத்துக்கான செலவீனங்களை அதிகரித்த போதிலும், அரசாங்கம் மீதான பொதுமக்களின் ஆதரவு பலவீனமாகவே காணப்படுவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

வருமான வரி சீர்திருத்தத்தின் தேவை சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் முக்கிய பகுதி என்றும் தரமதிப்பீட்டு நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை இலங்கை நிறைவேற்றும் வரை ஊழியர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்று சபையினால் அங்கீகரிக்கப்பட மாட்டாது என பிட்ச் ரேட்டிங்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மைக்கான நிதி உத்தரவாதத்தை கடனாளர்களிடமிருந்து பெறுவதும் பரிந்துரைகளில் ஒன்று என பிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் கடனை தாங்கமுடியாது என மதிப்பிட்டுள்ளதால், கடனாளிகளுடனான பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் கடன் நிவாரணத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் எனவும் தரமதிப்பீட்டு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றியமைக்கத் தீர்மானம்!

கொழும்பு, செப். 04

மெமரி சிப்கள் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரங்களை நீக்கும் அதேவேளை கியூ.ஆர். குறியீடு கொண்ட புதிய அட்டையை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான யோசனை சட்ட வரைவு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

இந்நாட்டில் ஏறக்குறைய 57 இலட்சம் பேர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளனர். அவர்களின் அடையாளம் மற்றும் ஓட்டக்கூடிய வாகன வகைகள் மற்றும் செல்லுபடியாகும் காலம் சாரதி அனுமதிப் பத்திர சிப்பைப் போன்ற நினைவக சிப்பில் பதிவு செய்யப்படுகின்றன.

இந்த அட்டைகள் ஒஸ்ரியாவில் இருந்து யூரோக்களில் பணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் திறைசேரியில் யூரோ இல்லாததால் இந்த அட்டைகளின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படாமல் உள்ளன. வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு மட்டும் அச்சடித்து அவர்களுக்கு தற்காலிக அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அச்சிடப்பட்ட அட்டைகளை இறக்குமதி செய்ய அதிக செலவாகும் என்பதால், அதில் பாதிக்கும் குறைவான விலையில் சைபர் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட அட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் கைரேகை மாற்று அறுவை சிகிச்சை!

## இந்தியாவில் சிக்கிய மோசடி கும்பலால் அம்பலம்

புதுடில்லி, செப். 04

சட்டவிரோதமான முறையில், குவைத்துக்கான விசாவை பெற்றுக் கொள்வதற்காக, இலங்கையில் கைரேகை மாற்று சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டமை குறித்து, இந்திய பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேற்கொண்ட விசாரணை களில் இருந்து, இது தெரியவந்துள்ளது.

குவைத் வேலை வாய்ப்புக்காக விண் ணப்பித்தவர்களின் கைரேகைகளை மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட தாக கூறப்படும் அறுவைச் சிகிச்சை முயற்சியை இந்தியாவின் தெலுங்கானா பொலிஸார் அண்மையில் முறியடித் தனர்.

இதன்போது புதிதாக குவைத் விஸ ாவுக்கு விண்ணப்பிப்பதற்காக கைரே கையை மாற்றிக்கொண்டதாக கூறப் படும் இருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

குவைத்தில் சட்டவிரோதமாக விஸா காலத்தை மீறித் தங்கியிருந்ததற்காக நாடு கடத்தப்பட்டவர்களை மீண்டும் அங்கு செல்வதற்காக இந்த குழு சட்டவிரோத கைரேகை மாற்று அறு வைச் சிகிச்சைகளை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கைது செய்யப் பட்ட மருத்துவ துணைப்பணியாளர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசா ரணையின்போது இலங்கை தொடர் பான தகவல்களும் வெளியாகின.

குவைத்தில் இருந்து நாடு கடத் தப்பட்ட இந்தியர் ஒருவர், மீண்டும் குவைத்துக்கு சென்று பணி செய்வதற் காக இலங்கையில் கைரேகை மாற்றுச் சிகிச்சையை மேற்கொண்டமையை தாம் அறிந்து கொண்டதாக அவர் விசாரணை யின்போது குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து தாமும் இந்த கைரேகை மாற்று சிகிச்சைகளை வரு மான ஈட்டும் வகையில் மேற்கொண்டு வந்ததாக அவர் விசாரணையாளர்களி டம் குறித்த மருத்துவ துணைப்பணியா ளர் கூறியுள்ளார்.

இந்த சிகிச்சைக்காக ஒருவரிடமிருந்து 25ஆயிரம் ரூபா வரையில் அறிவிடப் பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர் பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெலுங்கானா பொலிஸார், இலங்கை பொலிஸாருடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பர் என எதிர்பார்க்கப்படு கிறது. (அ)

# மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டில் முருகபூபதியின் பாரதி தரிசனம் வெளியீடு

கொழும்பு, செப். 04

இம்மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாகவி பாரதியார் மறைந்து 101 வருடங்களாகின்றன.

இந்நினைவு நூற்றாண்டில் எழுத்தாளரும், ஊடகவியலாளரு மான லெ. முருகபூபதி எழுதி யிருக்கும் பாரதி தரிசனம் என்ற புதிய படைப்பு மின்னூலாக வெளியாகிறது.




கடந்த 2021 ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி மகாகவி பாரதியின் நினைவு நூ ற்றாண்டு ஆரம்பமானது. அதனை முன்னிட்டு முருகபூபதி எழுதி வந்த பாரதி தரிசனம் தொடர் தற்போது மின்னூ லாக கிண்டிலில் வெளியாகின் றது.

பன்னிரண்டு அங்கங்கள் கொண்டிருக்கும் இந் நூல் இம்மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மெய்நிகரில் வெளியிடப்படவிருக்கி றது.

எழுத்தாளரும், அவுஸ்திரேலிய தமிழ் இலக் கிய கலைச்சங்கத்தின் நடப்பாண்டு தலைவரு மான திருமதி சகுந்தலா கணநாதன் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர்க ளில் ஒருவரும் இலக்கியவாதியும் சிட்னி தமிழ் பாடசாலைகளின் உயர் தர வகுப்பு ஆசிரியருமான திரு. திரு நந்தகுமார் தலைமையில் நடைபெற வுள்ள இந்த அரங்கில், பாரதியாரின் உடன்பிறந்த தங்கையின் கொள்ளுப் பேத்தி கவிஞர் உமா பாரதி, கப்பலோட் டிய தமிழன் வ. உ. சி.யின் பேரன் கே. காளிராஜன் , புதுவை பல்கலைக் கழகத்தின் வருகைதரு பேராசிரியர் முனைவர் அரிமளம். பத்மநாபன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் நூலாசிரி யர் முருக பூபதி ஏற்புரை வழங்கு வார். கலை, இலக்கிய வாதிகளையும் ஊடகவியலாளர்களையும் பாரதி இயல் ஆய்வா ளர்களையும் இந்த மெய் நிகர் அரங்கில் இணைந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர்.

மெய்நிகர் இணைப்பு:

Join Zoom Meeting

https://us02web.zoom us/j/82893424523? pwd =U3pzVnZybnhQWk9wYzVQZmNZeEt0dz09

Meeting ID: 828 9342 4523

Passcode: 109438

(அ)





# பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, செப். 04

வவுனியாவில் 156 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்துள்ள வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர் காரியாலய வளாகத்தில் உள்ள பொலிஸ் வீரர்கள் நினைவாக அமைக்கப்பட் டுள்ள நினைவுத்தூபி முன்பாக குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 7.40 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது உயிர் நீத்த பொலிஸாருக்கு அவர்களின் உறவினர்களும், பொலிஸாரும் இணைந்து மலர் அஞ்சலி செலுத்தியதுடன், தேசியக் கொடி மற்றும் பொலிஸாரின் கொடி என்பனவும் ஏற்றப்பட் டதுடன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கல கமகே உரையாற்றினார்.

அத்துடன் இறுதியில் உயிரி ழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்களுக்கு அத்தியா வசியப் பொருட்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டது.

வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ். ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுபத் கல கமகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி எதிரிசிங்க, பொலிஸ் அதிகாரிகள், பொலிஸார், உயி ரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற பொலிஸார், மாவட்ட பொது அமைப்புக்களின் உறுப்பினர் கள் என பலரும் கலந்துகொண் டனர். (அ)

# நீதிக்கு விரோதமாகச் செயற்படாது பொலிஸார் சேவையாற்றவேண்டும்

## மட்டு மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 04

பொலிஸ் உத்தியோகத்தர் கள் நீதிக்கு விரோதமான நட வடிக்கைகளில் ஈடுபடாது பொதுமக்களின் தேவைகளை அறிந்துசேவையாற்ற முன்வர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் சரத்குமார தெரிவித் தார்.




இலங்கையின் 156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு பொலிஸ் தின வார நிகழ்வுகள் நேற்று பொலிஸ் நிலையங்க ளில் ஆரம்பித்து வைக்கப்பட் டன.

மட்டக்களப்பு மாவட்டத் தின் பிரதான நிகழ்வு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரி யாலயத்தில் நேற்று காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் எல்.ஏ.ஈ.சரத்குமார தலைமை யில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது பொலிஸ் கொடி யேற்றப்பட்டு தேசிய பொலிஸ் தின வார நிகழ்வுகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன.

நேற்று தொடக்கம் எதிர் வரும் 10ஆம் திகதி வரையில் இந்த பொலிஸ் தின வார நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. நேற்று மட்டக்களப்பு தலை மைய பொலிஸ் நிலையத்தில் சிறந்த சேவையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட் டனர்.

இதன்போது உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட பிர திப்பொலிஸ் மா அதிபர் எல்.ஏ. ஈ.சரத்குமார, சிறந்த தலைவர் கள் உருவா வேண்டும் என்றால் காலையில் நேரத்துக்கு எழும்ப வேண்டும் நல்ல பண்புகளை பழக வேண்டும். இப்போது நீங்கள் வாசித்த புத்தகம் எது என்று கேட்டால் அது எல்லோ ரும் சொல்லுவது முகநூல் என்று. அவ்வாறு நாம் மாறிய ளோம்.

வெளிநாட்டுதலைவர்களை எடுத்து பார்த்தால் அவர்கள் வாசிப்பு திறமை கொண்டவர் கள். நட்பண்புகளை அவர்களி டம் இருந்து கற்றுகொள்ள முடியும். ஒரு பொலிஸ் அதிகா ரிக்கு பொறுமையும் மற்றவர்க ளுடைய பிரச்னைகளை கேட்டறியக்கூடிய தன்மை இருக்கவேண்டும்-என்றார். (அ)

# ஆசிரிய இடமாற்றங்கள் இல்லை

கொழும்பு, செப். 04

2023 புதிய கல்வி ஆண்டு வரையில் ஆசிரிய இடமாற்றங் களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட் டாது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் கர்ப்பவதிஆசிரி யைகளுக்கு, வைத்திய அறிக்கை யில் உறுதிப்படும் சுகாதார காரணங்களின் அடிப்படையில் வழங்கப்படும் பாடசாலைகளின் சேவை அவசிய தன்மையை அடிப்படையாகக் கொண்ட ஆசி ரிய இடமாற்றங்களை பெற்றுக் கொள்ளமுடியும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்னை கார ணமாக ஆசிரியர்களுக்கு வழங் கப்பட்டிருந்த தற்காலிக இணைப்பு கடந்த 31ஆம் திகதி யுடன் முடிவுறுத்தப்படவிருந் தது.

இந்த நிலையில் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களது இணக்கப்பாடு இருந்தால் மாத் திரமே, ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளில் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை சேவையில் ஈடுபட முடியும் எனவும் கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (அ)

# யானை தாக்கியதில் மீனவர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, செப். 04

காட்டு யானையின் சீற்றத்தினால் மட்டக்களப்பில் மீன் வியாபாரி ஒருவரது உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் மீன் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக தனது வசிப்பிடமான கிண்ணையடி கிராமத்திலிருந்து வியாபாரத்திற்காக பொண்டுகள்சேனை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்வேளையில் கிரான் கிராமத்திற்குட்பட்ட ஆதிசிவன் ஆலய வீதி, கருங்காலியடிச் சேனை பகுதியில் காட்டு யானையினால் தாக்கப்பட்டுச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சுமார் 42 வயது மதிக்கத்தக்க ஆனந்தன் எனும் 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரனைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# 37,760 சுற்றுலாப் பயணிகள் ஓகஸ்டில் இலங்கை வருகை!

கொழும்பு, செப். 04

ஓகஸ்ட் மாதத்தில் மொத்தம் 37,760 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான சர்வதேச வருகையாளர்களின் எண்ணிக்கை 496,420 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டு 194,495 சுற்றுலாப் பயணிகளின் வருகையும் 2021 ஓகஸ்ட் மாதத்தில் 5,040 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்தது.

இருப்பினும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக ஏப்ரல் மாதத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது.

குறிப்பாக அரசியல் ஸ்திரமின்மை காரணமாக விதிக்கப்பட்ட பயண ஆலோசனைகளை பல நாடுகள் தளர்த்தியதன் பின்னர், செப்ரெம்பர் மாதம் முதல் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# மேலும் 20 மில்லியன் டொலர் உணவு உதவிகள் இலங்கைக்கு!

## உலக உணவுத் திட்டம் அறிவிப்பு

**கொழும்பு, செப். 04**

**இலங்கைக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ள 40 மில்லியன் டொலர் பெறுமதிமிக்க உணவு உதவிகளுக்கு மேலதிகமாக, மேலும் 20 மில்லியன் டொலர் பெறுமதியுடைய உணவு உதவிகளை வழங்குவதாக உலக உணவுத் திட்டம் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் தெரிவித்துள்ளது.**

பிரதமர் மற்றும் உலக உணவு திட்டத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பணிப்பாளர் ஜோன் அயிலீப் உள்ளிட்ட அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குதல் மற்றும் திரிபோஷா போன்ற தமது கூட்டுத் திட்டங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாகவும் ஏனைய நாடுகளுக்கு இத்திட்டங்கள் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஒரு நாட்டின் ஆரோக்கியமான சமூகத்தின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், இலங்கையில் குடிசைக் கைத்தொழில் மற்றும் சிறு மீன்பிடி அபிவிருத்திக்கான உதவிகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, இலங்கைக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் 20 மில்லியன் டொலர்களால் அதிகரிக்கப்படுவதோடு மொத்த உதவித்தொகை 60 மில்லியன் டொலர்களாக உயரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# 5000 ரூபாவுக்கு மேல் சென்றால் மின்விநியோகம் துண்டிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 04

வடமராட்சி - தென்மராட்சி பகுதிகளில் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் மின் கட்டணம் நிலுவையில் வைத்திருப்போரின் மின் இணைப்பு எதிர்வரும் திங்கள் முதல் துண்டிக்கப்படும் என வடமராட்சி - தென்மராட்சி பிரதேசங்களுக்கான மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 5 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான மின் கட்டண நிலுவை வைத்திருப்போர் அவற்றை செலுத்தி விடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் அதனை மீள இணைப்பதற்கு குற்றப்பணம் 3 ஆயிரம் ரூபா மின் கட்டணத்துக்கு மேலதிகமாக செலுத்தவேண்டும் எனவும் அறிவித்துள்ளது.

(அ-2)

# எரிபொருளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம்?

கொழும்பு, செப். 04

எரிபொருள் இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் எரிபொருளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென பெற்றோலியம் தொடர்பான நிபுணர் சிறில் சுதுவெல்ல தெரிவித்துள்ளார்.

எரிபொருள் இறக்குமதி விநியோகம் மற்றும் விற்பனைக்கான விண்ணப்பங்களுக்கான பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அழைப்புக்கு பத்து நாடுகளைச் சேர்ந்த 24 நிறுவனங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன.

கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எழுநூறு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்களுக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமையின் அடிப்படையில் எரிபொருளின் விலை, தரம், நுகர்வோரைப் பாதிக்கும் பிரச்சினைகள் மற்றும் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனையிலுள்ள ஏனைய விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு எரிபொருளையும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வர வேண்டும் எனவும் இல்லை என்றால் எரிபொருள் விலை, தரம் போன்றவற்றை நிறுவனங்களின் விருப்பப்படி பேண முடியும் எனவும் சுதுவெல்ல தெரிவித்தார்.

தற்போது எண்ணெய் கூட்டுத்தாபனம் பெயரளவுக்கு ஆணைக்குழுவின் கீழ் உள்ளதாகவும் ஆனால் அதற்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கைபேசி, தொலைபேசி கட்டணங்கள் உயரும்

கொழும்பு, செப். 04

கையடக்கத் தொலைபேசிகள்,இணைக்கப்பட்ட மற்றும் தொலைக்காட்சி சேவைக்கட்டணங்களை அதிகரிக்க தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன்படி கைப்பேசி, நிலையான இணைப்பு, முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு கட்டணங்கள் 20 வீதத் தாலும், தொலைபேசி சேவைக்கட்டணம் 25 வீதத்தாலும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# 1.5 மில்லியன் ரூபா செலவில் வவுனியாவில் புதிய மைதானம்



வவுனியா, செப். 04

வவுனியா புளியங்குளம் முத்துமாரி நகர் கிராமத்தில் 1.5 மில்லியன் ரூபா செலவில் வாணி விளையாட்டு கழகத்திற்கான மைதானம் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், புளியங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி, கழக உறுப்பினர்கள், கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிராமப்புற நகரங்களை தேசிய ரீதியில் உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த மைதானம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 20 இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானம்

கொழும்பு, செப். 04

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது இழுபறி ஏற்பட்டுள்ள நிலையில் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் 20 இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக ஆளும் தரப்பின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

20 இராஜாங்க அமைச்சுக்களுக்கான நியமனம் நாளை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது சாத்தியமற்றதாயின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் நிலையான அமைச்சரவையை எதிர்வரும் வாரத்திற்குள் நியமிக்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது இழுபறி நிலையில் உள்ள நிலையில் நிலையான அமைச்சரவை, இராஜாங்க அமைச்சுக்களை நியமிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பது சாத்தியமற்றதாயின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் நிலையான அமைச்சரவையை ஸ்தாபிக்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாயின் அதன் அமைச்சரவையில் முக்கிய அமைச்சுக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு வழங்கப்படவேண்டும்.

ஏனெனில் பாராளுமன்றில் பொதுஜன பெர முனவே பெரும்பான்மையினை கொண் டுள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஊடக சந்திப்புகளில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகளை வழங்குவது குறித்து பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்கவில்லை என அரசியல் தரப்பில் குறிப்பிடப்படுகிறது.

(அ)

Eelanadu ஈழநாடு
28.08.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# சந்திரிக்காவின் புரிதல்?

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, சிறுபான்மை மக்களை அடக்கியாள நினைப்பதானது, நாட்டின் கூட்டு பலவீனமென்றும், இது நாட்டை பலவீனப்படுத்தும் என்றும் தெரிவித்திருக்கின்றார். சந்திரிக்கா இரண்டு முறை நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தவர். சந்திரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, தமிழ் மக்களின் பேராதரவை பெற்றிருந்தார். சந்திரிக்காவின் மீது தமிழ் மக்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சந்திரிக்கா சீப்பு, காப்பு – என்று கூவிவிற்குமளவுக்கு அன்று சந்திரிக்காவின் புகழ் தமிழ் பகுதிகளில் பரவியிருந்தது. அரசியலில், சந்திரிக்கா ஒரு சமாதான தேவதை போல் காட்சியளித்தார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த, யாழ்ப்பாணத்தை மீட்கும் நோக்கில், சமாதானத்திற்கான யுத்தத்தை அவர் பிரகடனம் செய்தபோது, அவர் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை சிதைந்துபோனது. மகிந்த ராஜபக்ஷவுக்கு அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ இருந்தது போல், சந்தரிக்காவுக்கு அவரது மாமானார் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இருந்தார். இராணுவ விடயங்கள் அனைத்தும் ரத்வத்தவின் கட்டுப்பாட்டில்தான் இருந்தன. சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தாலும் கூட, யுத்த விவகாரங்கள் அவரது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை.

இந்த பின்னணியில், அலரி மாளிக்கைக்குள் பிரவேசிக்கும் போதிருந்த சந்திரிக்கா பிற்காலத்தில் காணாமல்போனார். மெது மெதுவாக அதிகாரத்தின் அரூப கரங்களால் அவர் இறுகி அணைக்கப்பட்டு, இறுதியில் அவரைச் சுற்றியிருந்தவர்களின் பிடிக்குள் சிக்குப்பட்டுப் போனார். ஆனாலும் சந்திரிக்கா சில விடயங்களை துணிகரமாக முன்னெடுக்க முயற்சித்தார் என்பதில் மாறுபட முடியாது. குறிப்பாக அவரது காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு முயற்சி, அதுவரை முன்னெடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களிலேயே சிறந்ததாக இருந்தது என்பது பலரது அபிப்பிராயமாக இருக்கின்றது. இலங்கையை பிராந்தியங்களின் ஒன்றியம் என்று ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் பக்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட உச்சபட்சமானதொரு முயற்சியாக சந்திரிக்கா காலத்து முயற்சியை சொல்லலாம்.

2015 ஆட்சி மாற்றத்தின் போதும் சந்திரிக்கா காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார். மைத்திரிபால சிறிசேனவை, மகிந்த ராஜபக்ஷவின் முகாமிலிருந்து இழுத்தெடுத்ததில், சந்திரிக்காவுக்கு முக்கிய பங்குண்டு. ஆனாலும் ஆட்சி மாற்றத்தை தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதில் அவரால் காத்திரமான பங்களிப்புக்களை வழங்க முடியவில்லை. சந்திரிக்காவின் தகப்பனார் பண்டாரநாயக்கவின் கட்சி கூட இப்போது சந்திரிக்காவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனாலும் சந்திரிக்கா தொடர்ந்தும் ராஜபக்ஷக்களின் அதிகார மையத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்னும் நோக்கில் குரல் கொடுத்து வருகின்றார். அதற்கான தன்னாலியன்ற அனைத்தையும் செய்ய முயற்சிக்கின்றார். சந்திரிக்கா, அவரது தந்தையான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின், சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாசறையில் வளர்ந்தவராக இருந்தாலும், சந்திரிக்கா தன்னையொரு தாராளவாதியாகவே முன்னிலைப்படுத்தியிருந்தார். சந்திரிக்காவை ஒரு பாரம்பரிய சிங்கள தேசியவாதியாக முன்னிறுத்துவது கடினமானது. அவர் சில விடயங்களை பகிரங்கமாக முன்வைப்பதையும் இந்த பின்புலத்தில்தான் நோக்க வேண்டும்.

ஆனால் சந்திரிக்காவின் புரிதல், தென்னிலங்கையின் பெரும்பான்மையினரை, குறிப்பாக, இந்த நாட்டின் பௌத்த மதபீடங்களை பற்றிப்பிடிக்காத வரையில், இவ்வாறான புரிதல்களின் பெறுமதி என்ன? அன்று சந்திரிக்காவினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியை, ஏன் இப்போது செய்ய முடியாமல் இருக்கின்றது? இங்குதான் ஒரு விடயத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அதாவது, 2009இற்கு பின்னரான தமிழர் முன்னெடுப்புக்களை பலவீனமாக நோக்கும் போக்கொன்று தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் மத்தியிலுண்டு. அப்போது விடுதலைப் புலிகள் இருந்தனர். அவர்களை கையாளவேண்டுமென்பதற்காக தென்னிலங்கை சில விடயங்களில் கீழிறங்கிவந்தது. ஆனால் இப்போது அந்தத் தேவை தங்களுக்கில்லையென்றே பலரும் கருதுகின்றனர். இதுதான் அடிப்படையான பிரச்னையாகும்.

# உபத்திரம் கொடுக்காமல் ஒதுங்கவேண்டும் சீனா!

## கோருகிறார் சரவணபவன்



*யாழ்ப்பாணம், செப். 04*

*"ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம் கொடுக்காமல் சீனா ஒதுங்கியிருக்கலாம். அதை விடுத்து மேற்கு நாடுகளுடனும், இந்தியாவுடனும் முரண்படுவதாக நினைத்துக் கொண்டு தமிழ் மக்களை வதைக்கும் வகையில் நடந்து கொள்கிறது. கடன் வாங்கிய சிங்கள தேசத்துடன் - இலங்கை அரசுன் மாத்திரம் தனது நாட்டாண்மையை சீனா மட்டுப்படுத்திக் கொண்டால் நன்று."*

*- இவ்வாறு இலங்கைத் தமிழசுக் கட்சியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.*

*இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.*

*அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-*

*மனித உரிமை விவகாரங்களை முகமூடியாக பாவித்து சில நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்றன என்று சீனத் தூதுவர் குற்றம் சுமத்துகின்றார். இது சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதையைப் போல் உள்ளது. கடன்பொறியால் ஒரு நாட்டைக் கபளீகரம் செய்யும் சீனா, இதுபோன்று குற்றம் சுமத்துவதற்கு எந்த அருகதையும் அற்றது.*

*அமிர்தலிங்கம் ஐயாவின் ஜனன நினைவு தின நிகழ்வில் கடந்த வாரம் நான் ஓர் விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தேன். சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு இலங்கையைச் சுற்றிய பூகோள அரசியல் கொதிநிலைக்குச் சென்றுள்ளது. அதை நிரூபிக்கும் வகையிலேயே சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.*

*இலங்கைக்கு சீன உளவுக் கப்பல் வந்து சென்றிருந்தாலும் அந்த விடயத்தில் சீனா சில பின்னடைவுகளைச் சந்திருப்பதால், இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் மீது சீறிப் பாய்திருந்தது.*

*இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆபாந்தவர்களாக இந்தத் தரப்புக்களே இப்போது இருப்பதால், அவர்களைச் சீண்டுவது என்பது ஒருவகையில் தமிழ் மக்களைச் சீண்டுவதற்கு சமதையானதே.*

*அதற்கும் மேலாக, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நீதிக்கான நீண்ட நெடிய பயணத்தில் இதுவரையில் பங்காளர்களாக இருந்து வருபவர்களும் அந்தத் தரப்பினரே.*

*அந்தத் தரப்புக்கள் கையில் எடுத்துள்ள மனித உரிமை விவகாரத்தை, நையாண்டி செய்து அல்லது கீழ்த்தரமான முறையில் விமர்சித்து அவற்றைக் கைவிடச் செய்யலாம் என்று சீனா கனவிலும் நினைக்கக் கூடாது.*

*இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு முட்டுக் கொடுத்துவருவது சீனா.*

*பாதிக்கப்பட்ட தமிழ் தரப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் இந்த விடயங்களில் உதவி கோரியபோது, ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது தமது கொள்கையல்ல என்று சீனா பலமுறை சொல்லியிருக்கின்றது. ஆனால், இலங்கை அரசுக்குத் தனது கொள்கையை மீறி பல தடவைகள் உதவியிருக்கின்றது. இன்னமும் உதவிக் கொண்டிருக்கின்றது.*

*தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், மனித உரிமை விவகாரம் அவசியம் தானா என்று சீனத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். மனித உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு தகுதியற்றவர்கள் அவர்கள். ஆனாலும், இப்போது மனித உரிமை விவகாரம் அவசியமா என்று கேள்வி எழுப்பும் தூதுவர், தமிழ் மக்களின் நீதிக்கான பயணம் இன்னமும் முடிவுறாமல் இருப்பதற்கு தாங்களும் ஓர் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.*

*இலங்கையை கட்டுப்படுத்தி இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, சிறிலங்கா அரசாங்கத்துக்கு கண்மூடித்தனமாக ஆதரவை சீனா வழங்கி வந்து கொண்டிருக்கின்றது. அதன் விளைவுகளாலேயே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ளது பொருளாதார நெருக்கடி.*

*தங்களால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளைச் சாட்டாக முன்வைத்து, தமிழ் மக்களின் விடயங்களை நீர்த்துப்போகச் செய்யும் நிகழ்சி நிரலை முன்னெடுக்கும் சீனாவை ஒதுக்கவேண்டும்.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் தலையெடுத்தும் பார்த்திராத சீனா, இப்போது மெல்ல மெல்ல, தமிழர்களுக்கு கைகொடுக்கும் இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, தமிழ் மக்களுக்கு உதவுகின்றோம் என்ற போர்வையில் நுழைய முயல்கின்றார்கள். எங்கள் கையை வைத்தே எங்களின் கண்ணை குத்த நினைக்கிறார்கள்.*

*ஆனால், அவர்களின் உண்மை முகம் சீனத் தூதுவரின் கருத்தின் ஊடாக அம்பலப்பட்டிருக்கின்றது. எனவே எத்தகைய முகமூடியுடனும் எமது தேசத்தில் கால் பதிக்க சீனாவை அனுமதிக்கக் கூடாது, அனுமதிக்கவும் முடியாது - என்றுள்ளது.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# "அந்நியக்களை பாதீனியம்: அடங்க மறுப்பது ஏன்?" - அறியாததும் புரியாததும்!

பகிர்வு -45

கணபதி சர்வானந்தா

பாதீனியம் என்பது ஒரு நச்சுக் களை. யுத்த காலத்துக்கு முன் நான் அதைப் பார்த்ததே இல்லை. மக்கள் போராட்டத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது சத்தமில்லாது ஊடுருவிக் கொண்டது என்று தான் எம்மவர்கள் சொல்லுகிறார்கள். அதுவும் எம்மைக் காக்க என்று சொல்லிக் கொண்டு வந்த இந்திய அமைதிப்படையோடுதான் வந்து சேர்ந்ததாம். இன்று அது பல்கி யாழ் குடாநாட்டின் பட்டி தொட்டிகளில் எல்லாம் தன் இனத்தைப் பெருக்கிச் செழிப்போடு காணப்படுகிறது. அது மட்டுமல்லாது எமது நில வளத்தையும் சிறுகச் சிறுகப் பாழ்படுத்திக்கொண்டு வருகிறது எனவும் விவசாயிகள் விசனப்படுகிறார்கள். ஆனால் நாம் தான் அது பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. நாளைய சந்ததியின் நன்மை கருதியாவது அதனை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். இவ் விடயத்தில் நாம் அக்கறையற்றவர்கள் என்பதனை வெளிப்படுத்துவதாக பாதீனியத்தின் பரம்பல் காணப்படுகிறது.

பாதீனீயத்தை மருந்தாகப் பெரும்பாலும் வட அமெரிக்காவைச் சேர்ந்த சிகரில்லா அபச்சி மக்கள் பயன்படுத்துகின்றனர். மேலும் இரண்டாம் உலகப்போரின் போது இது இரப்பருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இருந்தும் இவற்றால் நன்மைகளை விடத் தீமையே அதிகம் என்று சொல்கிறார்கள். வளர்முக நாடுகளில் எந்தவொரு தாவரத்தையும் இலகுவாக நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை. அவர்கள் எல்லாவற்றையும் களை என்றுதான் பார்க்கிறர்கள். உதாரணம் ஆஸ்திரேலியாவை 70% வீதத்துக்கும் அதிகமாக அந்நியச் செடிகள் ஆக்கிரமித்துள்ளதால் அதைத் தடுக்க அந்நாடு வெளிநாடுகளிலிருந்து செடிகளை இறக்குவதைத் தடை செய்துள்ளது. பாதீனியம் தமிழகத்தில் உள்ள எல்லா ஊர்களிலும் பரந்து கிடக்கின்றது. பாதீனியம் வெளிவிடும் மகரந்தமும் வித்துக்களும் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு சுவாசக்கோளாறுகளையும், ஒவ்வாமைகளையும் ஏற்படுத்துகின்றன. இவற்றின் மீது எமது உடல் படும் போது ஒருவிதமான அரிப்புக் காணப்படும். இவற்றை உண்ணும் பசுக்களின் பால் ஒரு வித கசப்புத்தன்மையையும், மறைமுகமான நச்சுத்தன்மையையும் கொண்டிருக்கும் எனக் கண்டறியப் பட்டிருக்கிறது.

இது சருமநோயான சருமவழல், சொறி,கரப்பான் நோயை உண்டாக்குகின்றது. ஆஸ்மா என அறியப்படும் ஈழைநோயை ஏற்படுத்துகிறது. மிகையுணர்வூக்கத் தோற்றத்திற்கும் வழிகோலுகிறது. சூழ்நிலை மாற்றத்தால் பிற பயிர்களை எதிர்த்து விரைவாக வளரக் கூடிய வல்லமை கொண்டது. இதனை இயற்கையாகவே கட்டுப்படுத்துவதற்கு இயற்கையெதிரி ஒன்று இயங்கி வருவதுண்டு. ஆனால் அந்த இயற்கை எதிரி இங்கு காணப்படாததால் பாதினீயம் தடையின்றி வளர்ச்சி பெற்று எல்லா இடங்களுக்கும் பரவுகிறது. இது பற்றிய அதிக விழிப்புணர்ச்சி இன்மையால் மனிதர்கள் அதனை ஒரு கேடாகக் கண்டு கொள்வது கிடையாது. இதுபோல் கொண்டு வரப்பட்ட தாவரங்கள் பல உண்டு.

பாதினியும் பற்றி அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை அழிக்க வகை செய்ய வேண்டும். இச்செடியை அழிப்பது கட்டாயமாகும்.இவை விளை நிலங்களைப் பாழ்படுத்துகின்றன. வளிமண்டலத்தைப் பெரிதும் மாசுபடுத்துகின்றது. இயற்கையான பல நல்ல தாவரங்களை அழிப்பதோடு மட்டுமல்லாமல், அவ்வினங்கள் முற்றிலும் அற்றுப் போவதற்குப் பெருங்காரணமாய்த் திகழ்கின்றது. இது காற்றை மாசுபடுத்துவதன் மூலம் சுவாசம், நுரையீரல் மற்றும் தோல் நோய்கள் ஏற்படுத்துவதற்குக் காரணமாகின்றது. வட அமெரிக்காவைப் பூர்வீகமாக கொண்ட கரட்புல், மல்லிக்கிழங்குப் புல், காஜர் ஹான்ஸ், பார்த்தீனியம் என்றழைக்கப்படும் பார்த்தீனியச் செடிகள் களைச்செடிகளாக வளர்ந்து பயிர்களுக்குப் பாயும் நீரையும், இடப்படும் பசளையையும் பங்குபோடுகின்றது.

அவற்றை முறைப்படி அழிக்க வேண்டுமாயின் பூக்கள் சிதறாமல் செடிகளை வேரோடு பிடிங்கிப் பள்ளத்தில் இட்டு, கல் உப்பு கலந்த சோப்பு நீர்க்கரைசலைத் தெளிக்க வேண்டும். அல்லது எறும்பு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிற காமக்சின் என்னும் வேதிப்பொருளை இட்டு, செடிகள் வாடியபின் அல்லது பட்டுப் போன பின் அதனை நன்கு எரித்துவிட வேண்டும். பின் எரித்த குழிகளை மூடி அந்த இடங்களில் ஆவாரம் பூச் செடியை நட்டு வளர்ப்பதன் மூலம் மட்டுமே இக்களைகளை நாம் அழிக்கமுடியும்.

இவைகளை தழைச் சத்தாக இடக் கூடாது. அவ்வாறு இடுவதன் மூலம் இவை வளர்ந்து மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். கால்நடைகளுக்கு இரையாகப் போட்டாலோ அல்லது மேச்சலின்போது அவைகள் தவறுதலாக உண்டாலோ அவற்றிற்கு நோய்கள் வந்து அதன் இறைச்சி மற்றும் பால் மூலம் மனிதர்களை அது தாக்குவதோடு, சாணக்கழிவுகளில் இதன் மகரந்தங்கள் வெளிப்படுவதால் மீண்டும் அவை வளர்ந்து பரவிப் பெருகுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும். ஆகையால், இவற்றை முற்றிலும் அழிக்க வேண்டியது எமது சமூகப் பொறுப்பென்றுதான் சொல்லலாம்.

எனவே இவ்வாறானதொரு விடயத்தைப் பற்றி "அந்நியக்களை பாதீனியம்: அடங்க மறுப்பது ஏன்?" – அறியாததும் புரியாததும்!என்ற தலைப்பில் ஒரு நூல் வெளிவரவிருப்பதாக அறிந்தோம். திரு. கந்தையா பகீரதன் அதனை எழுதியிருக்கிறார். அதில் பாதீனியத்தின் தீமைகளோடு நன்மையான சில விடயங்களையும் தொட்டிருப்பதாக அறிந்தேன். அவர் பற்றி முகநூல் குறிப்பொன்றில் கீழ் கண்டவாறு கண்டேன்.

அவர் 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் 2011 ஆம் ஆண்டுமுதல் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார் . இவர் 2012ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பிற்கான விவசாய நிறுவகத்தில் தாவர பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். பின்னர் இவரின் ஆராய்ச்சித் திறமைகளுக்காக 2014 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்பின் ஆராய்ச்சிக்கான புலமைப் பரிசில் மற்றும் அவுஸ்திரேலியன் முதுகலை விருதையும் (IPRS & APA) பெற்று ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் மூலக்கூற்றியல் தாவரப் பாதுகாப்புப் பிரிவில் கலாநிதிப் பட்டத்தை 2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார். இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், விவசாய உயிரியல் துறையின் தலைவராகவும் பதவிகளை வகிக்கின்றார். இவர் தனது ஆராய்ச்சி முடிவுகளை 30 இற்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளில் முன்னிலைப் படுத்தியதோடு மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சஞ்சிகைகளிலும் தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரித்துள்ளார். இவர் எழுதிய "அந்நியக்களை பாதீனியம்: அடங்க மறுப்பது ஏன்?" அறியாததும் புரியாததும் என்ற நூல் தற்போது வெளிவர இருக்கின்றது. அது பாதீனியம் பற்றிய பல விடயங்களைத் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கிறோம்.

# இந்தவார ராசிபலன் 04.09.2022 - 10.09.2022

செப்ரெம்பர் 04 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 19

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : நவமி

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செயல்களில் லாபம் காண்பீர்கள். முயற்சிகள் இழுபறியாகும். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். அடுத்தவரிடம் உங்கள் பணிகளை ஒப்படைக்காதீர்கள். நண்பர் உதவியுடன் தேவைகளை அடைவீர்கள். சந்தோஷமும் சங்கடமும் கலந்த வாரமாக இருக்கும். நெருக்கடிகளால் சங்கடப்படுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த வெற்றியை அடைவீர்கள்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ]

வீட்டில் விசேஷங்களுக்கு திட்டமிடுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். கவனமுடன் செயல்படுங்கள். உங்கள் செயல்கள் லாபமாகும். அரசு வகையில் நன்மை அடைவீர்கள். வழக்கமான வேலைகளில் ஆதாயம் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணம் ஒவ்வொன்றாக நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். நட்புகளால் உங்கள் நிலையில் உயர்வு ஏற்படும். வழக்கமான வேலைகளிலும் சங்கடம் தோன்றும்.

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் எளிதாக வெற்றியாகும். தொழிலில் முன்னேற்றமும் திடீர் வரவுகளும் உண்டாகும். செயல்கள் இழுபறியாகும்.புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள்.தொழிலில் லாபம் காண்பீர்கள். எதிர்பாராத நெருக்கடிகளும் சங்கடமும் ஏற்படும். அந்நியர்கள் வழியே எதிர்பார்ப்பு நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்புகள் ஆதாயத்தை ஏற்படுத்தும்.

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

திட்டமிட்டு செயல்படுவீர்கள். வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். செயலில் கூடுதல் கவனம் தேவை. புதிய முயற்சி இழுபறியாகும். நினைத்ததை சாதிப்பீர்கள் உங்கள் எண்ணம் ஈடேறும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும். ஆரோக்கியம் சீராகும். பகைவர் தொல்லை விலகும்.

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

மகிழ்ச்சி அதிகரிக்கும். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். விருப்பம் நிறைவேறும். முயற்சிக்கேற்ப நன்மை உண்டாகும். பணியாளர்கள் பாராட்டப்படுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும். வருமானமும் செல்வாக்கும் அதிகரிக்கும்.வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். கனவுகள் பூர்த்தியாகும்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளைக் காண்பீர்கள். தடைகளும் தாமதமும் ஏற்படும். கவனமுடன் செயல்பட்டால் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டில் திருமணப் பேச்சு எழும். புதிய சொத்து வாங்கும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். தொட்டதெல்லாம் துலங்கும். பிள்ளைகளின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பார்ப்புகளில் பின்னடைவை சந்திப்பீர்கள். சிந்தித்து செயல்படுவதால் நினைத்ததை அடைவீர்கள். சிலருக்கு வேலைவாய்ப்பிற்குரிய தகவல் வரும். உடல் நலனில் கூடுதல் அக்கறை தேவை. எதிர்மறையான விஷயங்கள் நடந்தேறலாம். உங்களை சோதிக்கும் அளவில் சில சம்பவம் நடக்கும். நிதானம் அவசியம். சிலருக்கு வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் வரும்.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். குடும்ப நலனுக்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். விருப்பம் ஒவ்வொன்றாக நிறைவேறும். செயல்களில் வேகம், விவேகம் இருக்கும். பிள்ளையின் திருமண முயற்சி நிறைவேறும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். எதிர்ப்பு விலகும்.திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். வரன் தேடி வரும். எதிர்ப்பு விலகும்.

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்களுடைய எண்ணம் நிறைவேறும் வாரம் இது. அரசு வழியில் நீங்கள் எதிர்பார்த்தவை நன்மையாகும். எதிர்பாராத வரவு கிடைக்கும். செலவு அதிகரிக்கும். முயற்சி எளிதாக நிறைவேறும். செல்வாக்கு அதிகரிக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள். விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் உங்களைத் தேடி வருவர். பிள்ளைகள் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. சிலர் புதிய வியாபாரம் தொடங்குவீர்கள்.

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சிகள் வெற்றியாகும். பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு வெளிப்படும். எதிர்பாராத வரவு ஏற்படும். முயற்சிக்கேற்ற லாபம் உண்டாகும். நீங்கள் விரும்பியதை அடையும் வாரம் இது. எதிர்பார்த்த வகையில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில்நெருக்கடிகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைகள் விலகும். தைரியம் கூடும். வரவு செலவில் கவனம் தேவை.


### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நினைத்ததை சாதித்திடக் கூடிய வாரம் இது. நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி உங்களுக்கு சாதகமாகும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். செலவு அதிகரிக்கும். உடல் நிலையில் மீண்டும் சங்கடங்கள் தோன்றும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பணியில் நன்மை அதிகரிக்கும். சங்கடங்களை சந்திக்கலாம். இருப்பிடத்தை புதுப்பிக்கும் முயற்சியை மேற்கொள்வீர்கள். தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை வெளிப்படும். செயல்களில் நெருக்கடியை சந்திப்பீர்கள். உடல் நிலையில் கூடுதல் கவனம் தேவை. வாழ்க்கைக்குரிய வழியைக் கண்டுபிடித்து முன்னேறுவீர்கள். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

# சீன தூதர் தரும் சொக்லெட்டை மகிழ்ச்சியுடன் சுவையுங்கள் ஆனால், ஆன்மாவை விற்றுவிடாதீர்கள்



சென்னை மடல்
-பகவான் சிங்-

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி, தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஓகஸ்ட் 16 முதல் 22ஆம் தேதி வரை யுவான் வாங் 5 என்னும் உளவுக் கப்பலை நிறுத்திய சீனா, இப்போது, செப்ரெம்பர் தொடக்கத்தில், கொழும்பு தூதரை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குப் பரிசு மூட்டைகளுடன் அனுப்புகிறது. சென்ற டிசம்பரில் பதவியேற்ற பிறகு முதல் முறையாக யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதர் க்வி ஜெனாங்க் “விரைவில் மீண்டும் வருவேன்” என்று கூறிச் சென்றார். பாக்கு நீரிணைக்கு அப்பால் இருக்கும் தொப்புள் கொடி உறவை அறுப்பதே நோக்கமாக அவரின் தமிழ்த் தொடர்புகள் அமைந்துள்ளன. இந்தியாவுடன் போர்ச் சூழல் உருவாகும் நேரத்தில், இது தமக்குச் சாதகமாக இருக்கும் என்பதே சீனாவின் எண்ணம்.

தமிழர்களைக் கவரும் திட்டங்களில் ஒன்றுதான் க்வியின் யாழ் பயணம். லட்சக் கணக்கணக்கான இலங்கை ரூபாய் மதிப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளை வழங்குவதன் மூலம், தமிழ் இளைஞர்களைக் கானல் கனவுகளில் மூழ்கவைக்கும் பயணமாகவும் இது அமையும். தமிழர்களை, குறிப்பாக இளைஞர்களை, சீனர்களுடன் கைகோக்க வைப்பதன் மூலம், இலங்கையின் பிரம்மாண்டமான வளர்ச்சியுடன், தமக்கும் பெரியளவில் முன்னேற்றம் கிடைக்கும் என்று நம்ப வைப்பதே க்வியின் குறிக்கோள். தமிழர்கள் அதிகம் வசிக்கும் திருகோணமலை மற்றும் அம்பாறைக்கும்கூட அவர் செல்லவிருக்கிறார், இதே நோக்கத்துடன்.

க்வி வழங்கவுள்ள உதவிகளைப் பெற சிலர் ஆவலுடன் காத்திருக்கக்கூடும். ஆனால், என் ஈழ நண்பர்களுக்கு ஓர் அறிவுரை வழங்க அனுமதி நாடுகிறேன். ‘அவரது பரிசுகளை ஏற்றுக்கொள்ளுங்கள். அவருடன் கை குலுக்குங்கள். அவரை விட மனமார்ந்த புன்னகையையும் உதிருங்கள். ஆனால், இதிலெல்லாம் மயங்கி, உங்கள் ஆன்மாக்களை விற்றுவிடாதீர்கள். கானல் நீராகப்போகும் சீனத் திட்டங்களை நம்பி, உங்கள் எதிர்காலச் சந்ததியைப் பணயம் வைக்காதீர்கள்’ என்பதுதான் என் வேண்டுகோள்.

ஈழப்போரில் விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து தமிழர்களுக்கு இந்தியா மீதான நம்பிக்கை தொலைந்து போயிருக்கும் நிலையில், க்வியின் வடகிழக்குப் பயணம், இதுவரை சற்றே அலட்சியமாக இருக்கும் இந்திய அரசை, தமிழர்களின் முழு ஆதரவை மீண்டும் பெறுவதற்கான முயற்சிகளை அதிகரிக்கத் தூண்டும். பெரும்பான்மையான தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், சிலர் சீனாவுடன் நெருக்கமாக இருந்துகொண்டு வெளிப்படையாகவே இந்தியாமீது அவதூறு பரப்பி வருகிறார்கள். தமிழர்களிடம் இழந்த நம்பிக்கையைத் திரும்பப் பெற இந்தியா விரிவான விரைவான நடவடிக்கையில் இறங்கியாக வேண்டியது அவசியம் என்பதைத்தான் க்வியின் துரித செயல்கள் உறுதிப்படுத்துகின்றன.

அதிபர் ஷீ ஜின்பிங்குடன் க்விக்கு மிக நெருக்கமான உறவு உள்ளது என்றும், இருவருக்கும் இடையில் ‘ஹொட்லைன்’ தொலைபேசித் தொடர்பும் உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் க்வியை கொழும்புக்கு அனுப்பிய ஷீ, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்துமாகடல் தீவை சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார் என்றும் அறிகிறேன். ஆளும் சிங்கள இனத்தவரை மட்டுமல்லாமல் ‘குறிக்கோளுடன்’ செயல்படும் தமிழினத் தலைவர்களையும் வலைக்குள் கொண்டுவர, க்வி அப்போதே தனது நடவடிக்கைகளைத் தொடங்கினார். சென்ற ஆண்டு டிசம்பரில் அவரது யாழ்ப்பாண வருகை, ஒரு சீனத் தலைவரின் முதல் வருகை. அங்கு அவர் நடந்துகொண்ட விதம், பேசிய விதம் ஆகியவற்றால் இந்திய அரசும் எரிச்சலடைந்தது. குறிப்பாக, இராமேஸ்வரத்திலிருந்து 40 நிமிடப் படகு சவாரி தொலைவில் இருந்து , ‘இது ஒரு தொடக்கம் தான்’ என்று அவர் கர்ஜித்ததை தில்லி கவனத்தில் எடுத்துக்கொண்டது.

அந்தப் பயணத்தின்போது, மீன்பிடி வலைகள், ‘கோவிட் கிட்கள்’, கடல் சார் திட்டங்களுக்கான வாக்குறுதிகள் ஆகியவற்றைத் தாராளமாக வழங்கி, யாழ் மீனவர்களின் நட்பை நாடினார். தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிப்பதை வழக்கமாகக் கொண்டதால் அவர்களின்மீது இவர்களுக்கு இருக்கும் நீண்ட காலக் கோபத்தை அறிந்த அவர் இந்தப் பகடைக்காயை நகர்த்தினார். எதிர்வரும் பயணத்திலும் மீனவர்களைக் கவர அவர் முனைவார். அப்போதுதான், தேவை வரும்போது, எதிர்காலத்தில் இந்தியாவுடன் போர் மூண்டால், யாழ் மீனவர்களைச் சீனப் படைகளுக்கு உதவியாளர்களாக மாற்றலாம் என்பதே அவரின் திட்டம். இப்படித்தான் இமயமலையில் அசல் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில், திபெத்திய இளைஞர்களைத் தமக்கு உதவ சீனப்படைகள் பயன்படுத்திக்கொண்டுள்ளன.

தமிழ்த் தலைவர்களில் செல்வாக்கு மிக்க தலைவர்கள் சிலர், வடகிழக்கில் இருக்கும் தங்கள் இனம் உட்பட அந்தத் தீவு தேசத்தின் பாதுகாப்பான எதிர்காலம் இந்தி



## இமயமலை பகுதியில் திபெத்திய இளைஞர்களை கவரவைக்கும் விதம்போல் தமிழ் இளைஞர்களில் இலக்குவைக்கிறது சீனா

யாவின் குடையின் கீழ்தான் இருக்கிறது என்று நம்புகின்றனர். அண்மையில், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடகிழக்கில் சீனா ஆதிக்கம் செலுத்த தமிழர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஒரு தொலைபேசி நேர்காணலில் செல்வாக்கு மிக்க தமிழ்த் தலைவர் ஒருவர் என்னிடம், “சீனக் கட்டுப்பாட்டிலிருந்து எங்களைப் பாதுகாக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதான வாக்குறுதியுடன் தமிழ் எம்பிக்கள் மற்றும் மூத்த தலைவர்களின் ஒரு வலுவான குழு பிரதமர் மோடியையும் அயலுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கரையும் சந்திக்க நேரம் கோரியுள்ளோம். காலம் அதிகமில்லாத நிலையில் விரைவில் எங்களுக்கு நேரம் ஒதுக்கப்படும் என்று நம்புகிறோம்” என்று கூறினார். தற்போதைக்குப் பெயரை வெளியிட விரும்பாத அவர், மேலும், “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இந்தியாவிற்கு எதிராகவும் சீனாவுக்கு ஆதரவாகவும் இருவர் உள்ளனர். அவர்களைத் தனிமைப்படுத்தும்

## இலங்கை தமிழர்களிடம் இழந்த நம்பிக்கையை இந்தியா வலுப்படுத்தும்

செயல்முறையை நாங்கள் தொடங்கிவிட்டோம். எங்களுக்கு இந்தியாவின் உதவி தேவை” என்றார். ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு எவ்வளவு தேவையோ, அதை விட இந்தியாவிற்கு ஈழத் தமிழர்களின் ஆதரவு தேவை என்பதே இப்போதைய நிலைமை.

அம்பாந்தோட்டையில் தனது உளவுக் கப்பலான யுவான் வாங் 5-ஐ நிறுத்தியது வெறும் தேவைப் பொருட்களை நிரப்பிக்கொள்வதற்காக மட்டுமல்ல என்றும், அது சீனாவின் இலங்கைத் திட்டத்தின் ஒரு புதிய அத்தியாயம் என்றும் க்வியின் விரைவான செயல்பாடுகள் காட்டுகின்றன. தனது கப்பலின் வருகைக்கு இந்தியாவின் எதிர்ப்பைப் புறக்கணிக்க, சீனா, இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கவை நிர்ப்பந்தப்படுத்தியதுடன், இந்தியா தனது அண்டை நாடுகள் தங்கள் வளர்ச்சிக்காகப் பிற நாடுகளுடன் (சீனா) கூட்டுறவு வைத்துக் கொள்வதைத் தடுக்கும் பெரியண்ணனாகச் செயல்படுவதாகவும் விமர்சித்தது. சில நாட்களுக்கு முன், ‘இலங்கையை அதிகாரம் செய்யும் அண்டை அல்லது தொலைதூர நாடுகள்’ என்பது குறித்துப் பேசுகையில், க்வி, இலங்கை தனது வடக்கு அண்டை நாட்டின் (இந்தியா) ஆதிக்கத்திலிருந்து 17 முறை தப்பியுள்ளது என்று குறிப்பிட்டார். இவரின் அவதூறு அத்துடன் நிற்கவில்லை. அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலொசியின் தைவான் வருகையைத் தொடர்ந்து தைவான் ஜலசந்தியில் சீனா நடத்திய இராணுவ நடவடிக்கையை, அம்பாந்தோட்டையில் யுவான் வாங் 5 நிறுத்தப்பட்டதுடன் தொடர்பு படுத்தி, ‘சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் இருநாட்டு இறையாண்மை, சுதந்தரம் மற்றும் பிராந்திய கண்ணியத்தை இணைந்து காத்துவருகின்றன’ என்றும் குறிப்பிட்டார்.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய வார்த்தை, ‘பரஸ்பரம்’ என்பதுதான். இதன் பொருள், இலங்கையின் ‘இறையாண்மை, சுதந்தரம் மற்றும் பிராந்திய கண்ணியத்திற்கு’ அச்சுறுத்தல் இருப்பதாக ஒரு சாட்டைக் கூறி, சீனா, இலங்கையில் தனது துருப்புகளை இறக்கும் என்பதுதான். பிற நாடுகளின் இந்த அம்சங்களைப் பலமுறை மீறிய வரலாறு கொண்ட ஒரு நாட்டின் தூதரிடமிருந்து வந்த இந்த அறிவிப்பை, இந்தியாவிற்கு எதிரான போர் முழக்கமாகவே எடுத்துக் கொள்ளலாம்.

கப்பல் வந்த காரணம் இப்போது தெளிவாகிவிட்டதல்லவா? இலங்கையைச் சுற்றியுள்ள தன் பிடியை இறுக்கி, அதை வடக்கு நோக்கித் திருப்புவதனால் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுப்பதுதான் உண்மை நோக்கம். அதிர்ச்சியடைந்த இந்தியா, சற்று தாமதித்து க்வியின் குற்றச்சாட்டுக்கு எதிர்வினையாற்றியது. ‘அடிப்படை ராஜரீக விதிமுறைகளை’ அவர் மீறியதாக இலங்கையிலிருந்த இந்தியத் தூதரகம் பதிலடியை ட்வீட்டாகப் போட்டது. அத்துடன், இந்த சீன உளவுக் கப்பலின் இலங்கை வருகையின் உண்மையான நோக்கத்தையும் தோலுரித்தது. ஆனால், இந்தியாவின் 17 இலங்கைத் தாக்குதல்களைப் பட்டியலிட க்வியிடம் சவால் விடத் தவறியது. ஒருவேளை, இலங்கை பொருளாதார நெருக்கடியில் மூழ்கித் தவிக்கும்போது, முதல் நாடாக இந்தியா உதவிக்கரம் நீட்டியமை அந்த 17இல் அடங்குமோ?

உள் நாட்டு அல்லது சர்வதேசத் திட்டங்கள் எதுவானாலும், தனது தலைமை மாற்றத்தையும் தாண்டி, சீனா பல தசாப்தங்களுக்கு முன்னரே எப்படித் தன்னைத் தயார் செய்துகொள்கிறது என்பதையும், அதன் இலக்குகளை எட்ட எடுக்கும் முயற்சிகளையும் குறித்து நான் படித்திருக்கிறேன். ஷீ ஜின்பிங்கும் தன்னை எப்படி உச்சபட்சத் தலைவராக நீண்ட காலத்துக்கு நிறுவிக்கொண்டார் என்பது குறித்தும் ஒக்ரோபரில் நடைபெறக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் தான் மீண் டும் தேர்வாக அவர் எப்படி வழிவகை செய்திருக்கிறார் என்பது குறித்தும் படித்திருக்கிறேன். சீனாவை ஆசியா வின் மிகப்பெரிய சக்தியாக உருவாக்குவது மட்டுமல் லாமல், நீண்ட காலமாக உலகத்தை ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்காவையே அசைத்துவிடவும் அவர் எவ்வாறு காய் நகர்த்துகிறார் என்பதையும் அறிந்திருக்கி றேன். உருவாகிக்கொண்டிருக்கும் இரண்டாவது பனிப்போர்ச் சூழலில், கம்யூனிசத்தின் தலைமை யிடத்தை ரஷ்யாவிலிருந்து ஷீ எப்படி பறித்திருக்கிறார் என்பதையும் பார்க்கிறோம்.

ஆசியாவின் அங்கமான உக்ரேனிலும் தைவானிலும் தற்போது நிலவிவரும் குழப்பத்திலும் சீனாவின் பெரும் பங்கு உண்டு. ஷீயின் அங்கீகாரமின்றி புட்டின், உக்ரேன் போரைத் துவக்கியிருக்க மாட்டார். தைவான் ஜலசந்தியில் சீனா, இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளதன் மூலமாக, தைவான் தனது ஒருங்கிணைந்த பகுதி என்று நிலை நாட்டியுள்ளதுடன், அதை அமெரிக்காவின் கன்னத்தில் ஓர் அறையாகவும் ஷீ கருதியிருக்கலாம்.

இதனால்தான், தைவான் ஜலசந்தி நிலைமையை, அம்பாந்தோட்டை கப்பல் நிறுத்தத்துடன் க்வி ஒப்பிட்டார். பெலோசி வருகையையடுத்த ஒரு மாதத்திற்கு பீஜிங்கின் வன்மையான எதிர்வினையைச் சந்தித்த பிறகு தைவானின் அதிபர் சய் இங்க்-வென், தனது கடற்படையின்மூலம் சில துப்பாக்கிச் சூடுகளை நடத்தி, ஜின்மென்

(18ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# நீதிமன்ற அவமதிப்பும்

## ஜனாதிபதிகளின் மன்னிப்பும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

சிறைவாசம் அனுபவித்துவந்த சிங்கள சினிமா நடிகரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மன்னிப்பு வழங்கப்பட்டு வெலிக்கடை சிறையில் இருந்து ஆகஸ்ட் 26 விடுதலை செய்யப்பட்ட போது எதிர்க்கட்சி தலைவர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று அவரை வரவேற்றார். தொழிலமைச்சர் மனுஷா நாணயக்காரவையும் அங்கு காணக் கூடியதாக இருந்தது. சிறைச்சாலைக்கு வெளியே திரண்டிருந்த ஆதரவாளர்கள் ஆரவாரத்துடன் ரஞ்சனை வரவேற்றார்கள்.

அவரை தனது வாகனத்தில் கூட்டிச்செல்வதற்கு அமைச்சர் நாணயக்கார முயற்சி செய்த போதிலும் அங்கு உருவான அசௌகரியமான சூழ்நிலைக்கு மத்தியில் அவர் பின் வாங்கினார். பிரேமதாசவே ரஞ்சனை தனது வாகனத்தில் கூட்டிச்சென்றார்.



இப்போது ரஞ்சனுக்கு பதவிகளை வழங்குவதில் பிரேமதாசவும் அரசாங்கத்தரப்பில் சிலரும் போட்டிபோடுகிறார்கள். அப்படி என்னதான் மெச்சக்கூடிய காரியத்தைச் செய்துவிட்டு சிறை சென்று திரும்பியதால் இவர்கள் எல்லோரும் அவரை அரவணைப்பதில் முண்டியடிக்கிறார்கள். நீதித்துறையை அவமதித்ததாக குற்றவாளியாக காணப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்த அவர் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் வெளியே வந்திருக்கிறார். இந்த விடயத்தில் எந்தவிதமான ஒழுக்க நியாயத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசியல்வாதிகள் நினைப்பதாக தெரியவில்லை.

ரஞ்சன் பிரதியமைச்சராக இருந்த வேளையில் அலரிமாளிகைக்கு வெளியே 2017 ஆகஸ்ட் 21 செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது பெரும்பாலான நீதிபதிகளும் சட்டத் தரணிகளும் ஊழல் தனமானவர்கள் என்று குறிப்பிட்டார். இதற்காக அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றஞ் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் அவருக்கு உயர் நீதிமன்றம் 2021 ஜனவரி 12 நான்கு வருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்தது. நீதித்துறை பற்றி தான் கூறியதை ஒரு போதும் வாபஸ் பெறப்போவதில்லை என்று பிறிதொரு சந்தர்ப்பத்தில் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே கூறியதற்காக ரஞ்சன் மீது இன்னொரு நீதிமன்ற அவமதிப்பு குற்றஞ்சுமத்தப்பட்டு அந்த வழக்கில் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து உயர்நீதிமன்றத்தினால் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து 2021 ஏப்ரில் 7 அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

19 மாதகாலமாக சிறைவாசத்தை அனுபவித்த நிலையில் கடந்தவாரம் அவருக்கு ஜனாதிபதியின் மன்னிப்பு வழங்கப்பட்டதை அடுத்து வெளியே வந்திருக்கிறார். கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது ரஞ்சனுக்கு மன்னிப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், அவர் அதில் அக்கறை காட்டவில்லை.

உயர்நீதிமன்றத்தில் ஆகஸ்ட் 25 தனது சடடத்தரணியூடாக ரஞ்சன் சமர்ப்பித்த சத்தியக் கடதாசியில் ஐந்து வருடங்க ளுக்கு முன்னர் அலரிமாளிகைக்கு வெளியே தன்னால் தெரிவிக்கப்பட்ட கருத்து முற்றிலும் தவறானது, இலங்கையின் நீதித்துறை முழுவதையும் அவமதிப் பதாக அது அமைந்தது என்றும் அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்தார்.

தன்னால் அலரிமாளிகைக்கு வெளியே தெரிவிக்கப்பட்ட கருத்தை வாபஸ்பெற முடியாது என்று உயர்நீதிமன்றத் துக்கு வெளியே கூறியதும் மிகவும் பிழையானதும் முழு நீதித்துறையையும் அவமதிப்பதாகும் என்று சத்தியக் கடதாசியில் மேலும் குறிப்பிட்ட ரஞ்சன் இனிமேல் தனது வாழ்நாளில் எந்தவொரு நீதிபதியையும் அவமதிக்கும் வகையிலான கருத்துக்களை தெரிவிக்கப் போவதில்லை என்றும் உறுதியளித்தார். இதையடுத்தே அவருக்கு மன்னிப்பு அளிக்கும் பத்திரத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டார்.



ஆனால், ரஞ்சனுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு முழுமையானது அல்ல. அவரது குடியுரிமைகள் மீள வழங்கப்படவில்லை. அதனால் அவர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவோ அல்லது தேர்தல்களில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ முடியாது. சஜித் பிரேமதாசவின் வார்த்தைகளில் கூறுவதானால் ரஞ்சனுக்கு கிடைத்தது அரை விடுதலையே. அவர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கக் கூடிய ஒருவராக மாறாதிருப்பதை உறுதி செய்வதற்கு பிரேமதாச பெரும் பிரயத்தனம் செய்கிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் வெற்றிடம் ஏற்படும்போது ரஞ்சனை அதற்கு நியமிக்கத் தயாராயிருப்பதாகவும் ஆனால் குடியுரிமைகள் அவருக்கு இல்லை என்பதால் அதைச் செய்ய முடியாது என்றும் கூறியிருக்கும் பிரேமதாச, தனது கட்சியின் செயற்குழுவின் உறுப்பினராக அவரை நியமித்து அதன் மூலமாக தங்களது பாராளுமன்றக் குழுவின் ஒரு உறுப்பினராக அவர் கருதப்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தப்போவதாக பின்னர் தெரிவித்தார்.

இதனிடையே, ஐக்கிய மக்கள் சக் தியில் இருந்து பிரிந்து தற்போது விக் கிரமசிங்க அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் ஹரின் பெர்னாண்டோவும் மனுஷா நாணயக்காரவும் அவரை தங்கள் பக்கம் இழுத்துவிட துடியாய்த்துடிக்கிறார்கள். வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான நல்லெண்ணத் தூதுவராக



ரஞ்சனுக்கு நாணயக்கார நியமனம் வழங்கியிருக்கிறார்.

ஆனால், தற்போதைக்கு எந்தவொரு அரசியல் கட்சியிலும் இணையாமல் சுயாதீனமாக இருக்கப்போவதாக கூறியிருக்கும் ரஞ்சன், பின்னர் ஒரு கட்டத்தில் தீவிர அரசியலுக்கு திரும்பலாம் என்று எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். “மரணமடைவதற்கு முன்னர் என்றாவது ஒரு நாள் தீவிர அரசியலுக்கு திரும்ப முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளேன்” என்று தான் அவர் வெலிக்கடைச் சிறைக்கு வெளியே வந்தவுடன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ரஞ்சன், குறிப்பிட்ட சில விடயங்களை பேசக்கூடாது என்ற உத்தரவின் கீழ் நான் இருக்கிறேன். இது எனக்கு வழங்கப்பட்ட மன்னிப்பின் நிபந்தனையாகும். குற்றங்களைச் செய்வதற்காக நாம் சிறைக்குப் போவதில்லை. குற்றங்களை அம்பலப்படுத்துவதற்காகவே சிறை செல்கிறோம். என்னால் இப்போது கூறக்கூடியது இதுதான்” என்று குறிப்பிட்டார்.

ஒரு புறத்தில் பிரேமதாசவையும் மறுபுறத்தில் ஹரின் பெர்னாண்டோ மற்றும் நாணயக்காரவையும் கைவிட முடியாமல் ரஞ்சன் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார். சிறையில் இருந்த வேளை அவரை அடிக்கடி சென்று பார்த்தவர் பிரேமதாச. அதேவேளை அவருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரசார இயக்கத்தை முன் னெடுத்ததில் முன்னணியில் நின்றவர் கள் பெர்னாண்டோவும் நாணயக் காரவும். ஜனாதிபதியாக பதவியேற்ற சில வாரங்களில் தனக்கு மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி விக்கிரமசிங்கவையும் ரஞ்சன் மறக்க முடியாது. வெளியில் வந்தும் கூட அவர் இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு கைதி மாதிரியே இருக்கவேண்டிய நிலை.

அண்மைக் காலத்தில் இலங்கையில் நீதித்துறையை அவமதித்ததாக குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை சென்ற முதல் அரசியல்வாதி ரஞ்சன் அல்ல. ஜனாதி பதிகளினால் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையான முதல் அரசியல்வாதியும் அவரல்ல.

சுமார் 20 வருடங்களுக்கு முன் னர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவும் 6 வருடங்களுக்கு முன்னர் பொதுபலசேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக சிறை சென்றார்கள். ஞானசார ஒரு மதகுருவாக இருக்கின்ற போதிலும் அவரையும் அரசியல்வாதிகளின் வரிசையில் வைப்பதில் பொருத்தப்பாடு இல்லையென்று கூறமுடியாது. அரசியல்வாதிகளை விடவும் முனைப்புடன் இனவாத நச்சுக் கருத்துக்களைப் பரப்பி பேரினவாத அரசியலை ஊக்குவிப்பவர் அவர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் திசாநாயக்க அமைச்சராக இருந்தவேளை 2003 நவம்பரில் ஹபராதுவவில் வருடாந்த விவசாய விழாவில் உரையாற்றியபோது உயர் நீதிமன்றத்தின் செயற்பாடுகளை கண்டனம் செய்து வெளியிட்ட கருத்து நீதிமன்ற அவமதிப்பாக அமைந்ததாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலை புலிகளுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த வேளையில் இராணுவ விவகாரங்களைக் கையாளுவதில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திலக் மாரப்பனவுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் (பிரதம நீதியரசராக சரத் என்.சில்வா இருந்தபோது) உயர்நீதிமன்றம் தலையிட்டு ஜனாதிபதிக்கு சாதகமான முறையில் தீர்ப்பை அறிவித்தது.

இராணுவத்தின் மீதான கட்டுப்பாட்டை கொண்டிருப்பதில் ஜனாதிபதியின் அதிகாரத்தை உறுதிப்படுத்திய உயர்நீதிமன்றம் பாதுகாப்பு அமைச்சரின் நடவடிக்கைகள் செல்லுபடியற்றவை என்று அறிவித்தது. இதனால் துணிச்சல் பெற்ற திருமதி குமாரதுங்க பிரதமர் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்திடமிருந்து பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமச்சுக்களை பறித்தெடுத்தார்.

இது விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் தலையீட்டை எதிர்ப்பதாகவும் அதன் தீர்ப்பை ஏற்கப்போவதில்லை என்றும் தனது அந்த உரையில் திசாநாயக்க குறிப்பிட்டார். அதுவே அவரை சிக்கலில் மாட்டியது.

அவர் மீது தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வு 2004 டிசம்பர் 7 இரு வருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. (09 ஆம் பக்கம் பார்க்க...)

# நீதிமன்ற அவமதிப்பும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)



இலங்கையில் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக சிறைக்குச் சென்ற முதல் பாராளுமன்ற உறுப்பினரான திசாநாயக்க வெலிக் கடைச்சிறையில் அல்ல, பெரும்பாலும் தேசிய வைத்தியசாலையின் மேர்ச் சண்ட் வார்ட்டில்தான் நாட்களைக் கழித்தார் எனலாம். பின்னர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக வந்ததும் 2006 பெப்ரவரியில் அவருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

2010 ஜனவரியில் காணாமல்போன பிரபல அரசியல் கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னெலிகொடவை கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கை (2016) விசாரித்த நீதிபதி அவர்களுக்கு பிணை வழங்க மறுத்ததை அடுத்து நீதிமன்றத்துக்குள் பிரவேசித்த ஞானசாரதேரர் நீதிபதியையும் சட்டத்தரணிகளையும் அவதூறு செய்ததுடன் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவையும் அச்சுறுத்தினார்.

இதையடுத்து சட்டமா அதிபர் திணைக்களம் அவருக்கு எதிராக தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 2018 ஆகஸ்ட் 8 ஆம் திகதி 6 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு முன்னதாக சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் 6 மாதச் சிறைத் தண்டனை தேரருக்கு விதிக்கப்பட்டது.

அவருக்கு 2019 மே 23 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். ரஞ்சனின் விடுதலை தொடர்பாக கடந்தவாரம் கருத்துவெளியிட்ட ஆங்கிலப் பத்திரிகையொன்று நீதிமன்ற அவமதிப்புக் காக சிறைக்கு சென்றவர்களுக்கு வழங்கப்பட்ட முன்னைய மன்னிப்புகளைச் சுட்டிக்காட்டி ஞானசாரவுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு ஜனாதிபதியாக சிறிசேன செய்த வெறுக்கத்தக்க செயல்களின் நீண்ட பட்டியலில் ஒன்று என்று வர்ணித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

ஆனால், திசாநாயக்கவும் ஞானசாரவும் செய்த குற்றம் ரஞ்சனின் குற்றத்தையும் விட பாரதூரமானதாக இருந்தாலும் கூட அவர்களுக்கு முழுமையான மன்னிப்பு (குடியியல் உரிமைகளுடன்) முன்னைய ஜனாதிபதிகளினால் வழங்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி ரணில், ரஞ்சனுக்கு அவ்வாறு செய்யவில்லை. அதற்கு ஒரு அரசியல் காரணி இருக்கக் கூடும்.

இது இவ்வாறிருக்க, மேற் கூறப்பட்ட மூவருக்கும் ஏற் பட்ட அனுபவத்தில் இருந்து எந்த படிப்பினையையும் அரசியல்வாதிகள் பெறவில்லை என்பதைக் காண்பிக்கும் ஒரு சம்பவமாக புத்தளம் மாவட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, நீதிபதிகள் குறித்து தெரிவித்த கருத்து தொடர்பில் இரு சட்டத்தரணிகள் அவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக தண்டிக்கப் படவேண்டும் என்று கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

ஆகஸ்ட் 23 பொதுஜன பெரமுனவின் தலைமையலுவலகத்தில் செய்தியாளர் மகா நாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, நாட்டில் சட்டம் சீர்குலைந்திருப் பதற்கு காரணம் நீதிபதிகள் கிறிமினல்களை விடுதலை செய்வதாகும் என்று குறிப்பிட்டதாக செய்தி வெளியாகியிருந்தது. இவரது விவகாரம் எவ்வாறு கையாளப்படும் என்பதை அடுத்துவரும் நாட்களில் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

எமது நாட்டில் நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் பிரதம நீதிரசர் ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சம்பவம் கூட இடம் பெற்றது.

2018 அக்டோபரில் ஜனாதிபதி சிறிசேன பிரதமர் பதவியில் இருந்து விக்கிரமசிங்கவை அகற்றிவிட்டு மகிந்த ராஜபக்சவை நியமித்ததை அடுத்து மூண்ட அரசியலமைப்பு நெருக்கடிக்கு மத்தியில் நவம்பர் முற்பகுதியில் பாராளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டார். அந்த அறிவித்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு தொடர்பில் சில வாரங்களுக்கு பிறகு சரத் என். சில்வா மருதானையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கருத்து வெளியிட்டார்.



அந்த கருத்து நீதித்துறையை அவமதிக்கும் வகையில் இருந்ததாக மூன்று பேராசிரியர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். அந்த வழக்கு 2019 மே மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த நிலையில் இரு நீதியசர்கள் தாங்கள் அந்த அமர்வில் இருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்கொள்வதாக அறிவித்தனர்.

சரத் என். சில்வா பிரதம நீதியரசராக பதவி வகித்த காலத்தில் வழங்கிய தீர்ப்பொன்றுக்காக பல வருடங்கள் கழித்து நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்ட விசித்திரத்தையும் கண்டோம்.

2004 டிசம்பர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு அனர்த்த நிவாரண உதவியாக வெளிநாடுகளிடம் இருந்து பெருமளவு நிதி கிடைத்தது. சுனாமி வேளையில் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க நாட்டில் இருக்கவில்லை. அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்சதான் உடனடி நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்தார். அவரது அம்பாந்தோட்டை மாவட்டமும் சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று.

"ஹெல்பிங் அம்பாந்தோட்டை" என்ற நிதியம் ஒன்றை உருவாக்கிய ராஜபக்ச அதற்கு கிடைத்த நிதியை கையாடி தனியார் வங்கியொன்றில் வைப்பிலிட்டதாக 2005 குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த சரத் என். சில்வா தலைமையிலான உயர்நீதிமன்றம் குற்றச்சாட்டு தவறானது என்று தீர்ப்பளித்தது. அவ்வாறு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதனால் தான் ராஜபக்சவினால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடியதாக இருந்தது.

ராஜபக்சவின் இரண்டாவது பதவிக்காலத்தின் இறுதியில் சரத் என். சில்வா, "ராஜபக்ச இப்போது வித்தியாசமான மனிதராக மாறிவிட்டார். அவரது ஆட்சியில் பெருமளவு ஊழல் இடம்பெறுகிறது. ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் என் முன்னால் இருந்த சாட்சியங்களின் அடிப்படையில் அப்போது தீர்ப்பை வழங்கினேன்.

அவர்கள் இப்போது நடந்துகொள்கின்ற முறையைப் பார்த்தால் அந்த வழக்கில் அவர் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவரை அந்த வழக்கில் இருந்து விடுவித்ததற்காக மன்னிப்புக் கோருகிறேன் " என்று பகிரங்கமாக கூறினார்.

தவறானது என்று அவரே ஒத்துக் கொள்கின்ற தீர்ப்புத்தான் ராஜபக்ச ஆட்சிக்கு வழிவகுத்து நாட்டை இன்றைய வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்திருப்பதால் மக்கள் அனுபவிக்கின்ற அவலங்களுக்கு தானும் ஒரு வகையில் பொறுப்பு என்று முன்னாள் பிரதம நீதியரசர் மனம் வருந்துவாரோ என்னவோ!




# என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்?

ஈழநாடு பத்திரிகையை வட்ஸ்ஸப்பில் தினமும் வாசிப்பவன், அதுவும் முதலில் வாசிப்பது ஊர்க்குருவியாரின் இப்படியும் நடக்கிறது, ஊர்க்குருவியாரின் கேள்விகள் ஆரம்பத்தில் எரிச்சலையூட்டி சிலபல கலகங்களை தோற்றுவித்தாலும் கடைசியில் நல்லதையே செய்யும், இரத்தினச்சுருக்கமாகச் சொன்னால் நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள்.

நேற்றைய (31.08.2022) பதிப்பில் மதிப்புக்குரிய சம்பந்தன் ஐயாவின் ‘ இனியும்’ என்கின்ற வார்த்தைக்கு அர்த்தம் கேட்டிருந்தீர்கள்,

இல்லையேல் அடுத்து என்ன செய்வீர்கள்? என்ற பொருள்படவும் ஒரு கேள்வியை போட்டுவிட்டீர்கள்,

‘இனியும்’ என்கின்ற வார்த்தை இன்று, நேற்று பயன்படுத்திய வார்த்தையல்ல, ஐயா சம்பந்தனார் எந்த அரசியல் கட்சியில் கால்பதித்தாரோ, அந்த அரசியல் கட்சியை தலைமை தாங்கியவர்கள் பயன்படுத்தி வரும் வார்த்தை. உதாரணத்துக்கு சொன்னால் ‘இனியும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்’, ‘ இனியும் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டோம்’, இனியும் தமிழ் இழைஞர்கள் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்’ , என்று மேடைக்கு மேடை ஏறி அடுக்கு வசனங்களை முழாசிவிட்டு தமிழர் களின் நரம்புகளை முறுக்கி விட்டு அரசியல் செய்தவர்களின் அடிச்சுவடுகளிலிருந்து வந்த ஒருவர், இப்போதுதான் இவருடைய காலத்தில் புதிசாக பயன்படுத்துகிறார் என்கின்ற மாதிரியல்லவா, தாங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.

பாவம் மனுசன் இன்னும் கொஞ்சக்காலத்துக்கு தன்னுடைய அரசியல் வாழ்கையை நகர்த்த வேண்டுமானால், இந்த ‘இன்னும்’ என்ற வார்த்தையை தவிர வேறெந்த வார்த்தையை பயன்படுத்த முடியும்? தாங்களே ஒரு கணம் மனசை தொட்டு கேட்டு பாருங்கள்? அப்பொழுது அர்த்தம் புரியும்.

இனி தங்களின் அடுத்த கேள்விக்கு வருவோம்,

ஐயாவின் கோரிக்கைக்கு அரசு அடிபணியாவிட்டால்?

ஐயா என்ன செய்வார் என்று சொல்ல வில்லையே என்று ஆதங்கப்பட்டுக்கொண்டீர்கள், என்னய்யா ஒரு பழுத்த பத்திரிகையாளர் இப்படி கேட்டு விட்டீர்களே?

இன்று தமிழ்நாட்டின் சின்ன திரைகளிலே வரும் தொடர்களில், ஒவ்வொரு தொடரும் முடியும் போது அடுத்த தொடரை பார்க்க வேண்டும் போல முடிப்பார்கள், அப்பொழுது தான் அந்த தொடரை தொடரலாம்.

தங்க ளின் மனத்தாங்கலின்படி, ஐயா எல்லாவற்றையும், ஒரு அறிக்கையில் சொல்லி விட்டால், நாளைய அரசியலை, எப்படி காய் நகர்த்த முடியும்?

சரி, பதவியை இராஜினாமா செய்வேன் அல் லது சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொல்லி விட்டால், நாளைய கேள்வி?

முடியுமான காரியமா?

**அன்புடன்**
**அருண்**
**மொன்றியால், கனடா**

**பத்திரிகை பற்றி வாசகர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை நாமும், மற்றய வாசகர்களும் அறிந்துகொண்டால், அது பத்திரிகையை மேலும் பதப்படுத்தும் என்று நம்புகின்றோம். உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.**

eelanaduweekly@gmail.com

## சம்பந்தப்பட்டவர்களையும் சென்றடைய வேண்டும்!

அன்புள்ள ஈழநாடு ஆசிரியருக்கு வணக்கம்.

தினமும் காலையில் தங்கள் ஈழநாடு கிடைத்ததும், எமது நண்பர்களுக்கு பகிர்ந்துவிடும் நான், முதலில் பார்த்து படிப்பது தங்கள் "இப்படியும் நடக்கிறது" பத்தியைத்தான். இன்று நீங்கள் குறிப்பிட்டுள்ள முல்லாவின் கதையுடன் சம்பந்தன் அய்யாவையும் இணைத் திருப்பதை வாசித்து வாய்விட்டு சிரித்தேன். உங்கள் பதிவுகள் சம்பந்தப்பட்டவர்களை சென்றடைய வேண்டும்.

அதுவும் எமது எதிர்ப் பார்ப்புத்தான். இத்துடன் பல வருடங்களுக்கு முன்னர் சம்பந்தன் பேசிய உரை வெளியான பத்திரிகையை உங்கள் பார்வைக்கு இணைக்கின்றேன்.

**நன்றி.**
**அன்புடன்**
**முருகபூபதி**

ரஞ்சன் அருண் பிரசாத்

# இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணம் எப்போது வரும்?

இலங்கையுடன் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றது. கொழும்பில் நேற்று முன்தினம் (செப்டம்பர் 1) விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள், இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன்படி, 48 மாத காலத்திற்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதியுடன் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு மற்றும் பொருளாதார திருத்தம் தொடர்பிலான வேலைத்திட்டத்திற்கான கலந்துரையாடல்களுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி இலங்கைக்கு வருகைத் தந்தது.

இந்த குழுவின் விஜயத்தில், இலங்கை அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைமைகளுடன் பல்வேறுப்பட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இவ்வாறான பேச்சுவார்த்தைகளின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளான மெசர்ஸ் ப்ருயர் மற்றும் நோசாகி ஆகியோர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர்.




பொருளாதாரத்தை சீர் செய்தல் மற்றும் கொள்கைகளை திருத்துவதற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றுக்காக இலங்கை அதிகாரிகளுக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.




இதன் அடிப்படையில், 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை கடன் வசதியாக பெற்றுக்கொடுக்க இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டாலும், இலங்கைக்கு நிதி உதவி தற்போதைக்கு கிடைக்காது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம். கணேஷமூர்த்தி, தெரிவித்தார்.

**"இது ஒரு ஆரம்பம்தான்" - பொருளியல் பேராசிரியர்**

இது ஆரம்பகட்ட நடவடிக்கை என்ற போதிலும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவி கிடைப்பதற்கு இன்னும் 3 முதல் 6 மாத காலம் எடுக்கும் என அவர் கூறுகின்றார்.

"அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு என்பது, ஆரம்ப கட்டம் தான். அடுத்த கட்டத்திற்கு போகும் போது தான், அடுத்த பிரச்னைகள் தொடர்பில் பேச வேண்டி வரும். அதிகாரிகள் மட்டத்தில் மூன்று கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கின்றது. இதில் கடன் மறுசீரமைப்பு தான் மிக முக்கிய பிரச்னையாக இருந்தது. இலங்கையை பொருத்த வரை, சீனாவை தவிர, ஏனைய நாடுகளுடன் பேச்சுவார்த்தை முடிந்துள்ளதாக சொல்லப்படுகின்றது" என்று அவர் கூறினார்.

"சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, முடிவுக்கு வந்தால், அது சரி வரும் என நினைக்கின்றேன். சர்வதேச நாடுகளிடமிருந்து ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களை நாம் எவ்வாறு மீள செலுத்த போகின்றோம் என்பது குறித்து அந்தந்த நாடுகளுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதே, கடன் மறுசீரமைப்பு என கூறப்படுகின்றது. அந்தந்த நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால் மாத்திரமே அடுத்த கட்டத்திற்கு நகர முடியும். அதுவொரு கடன் நிபந்தனையாக பார்க்கப்படுகின்றது," என்கிறார் அவர்.

"வழமையாக அப்படி வருவது குறைவு. கடனை மீள செலுத்த முடியாது என இலங்கை ஏற்கனவே அறிவித்துவிட்டது. அவ்வாறு அறிவித்தபடியால், இது முக்கியமாக காணப்படுகின்றது. கடனை மீள செலுத்த முடியாது என அறிவித்த பிறகு, அரசாங்கம் நிதி ஆலோசகரையும், சட்ட ஆலோசகரையும் நியமிக்க வேண்டும். இந்த இரண்டும் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களின் ஆலோசனைக்கு அமையவே இலங்கை நடக்கும். இலங்கைக்காக அவர்கள் தான் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவார்கள்," என பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம். கணேஷமூர்த்தி தெரிவித்தார்.

நிதி ஆலோசனை மற்றும் சட்ட ஆலோசனை நிறுவனங்கள் மிக முக்கியமான மூன்று விடயங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தும் என அவர் கூறுகின்றார்.



எம்.கணேஷமூர்த்தி, சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

**மூன்று முக்கிய கேள்விகள்**

01. இலங்கை ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களை மீள செலுத்துவதற்கான கால எல்லையை நீடிக்க முடியுமா?

02. இலங்கை ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களுக்கான வட்டி வீதத்தை குறைக்க முடியுமா?

03. இலங்கை ஏற்கனவே பெற்றுக்கொண்ட கடன்களில் மீள செலுத்திய தொகைக்கு அப்பால் காணப்படுகின்ற எஞ்சிய தொகையில் குறைப்புக்களை மேற்கொள்ள முடியுமா?

என்ற மூன்று விடயங்கள் குறித்து, இந்த நிறுவனங்கள் கடன் வழங்கிய நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிக்கும் என அவர் கூறுகின்றார்.

அதிகாரிகள் மட்டம் என்றால், சர்வதேச நாணய நிதியம் இலங்கை சார்பில் யாருடன் கலந்துரையாடல்களை நடத்தும் என சூ, பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தியிடம் கேள்வி எழுப்பியபோது,

"இலங்கையில் அதிகாரிகள் மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்படும். நிதி அமைச்சின் அதிகாரிகள், மத்திய வங்கியின் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்துவார்கள். அதுவே தொழில்நுட்ப ரீதியிலான கலந்துரையாடல். அதன் பின்னரே, நாட்டினுடைய தீர்மானங்களை எட்டக்கூடிய ஜனாதிபதி, நிதி அமைச்சர், பிரதமர் உள்ளிட்ட அரசியல் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படும். முக்கியமாக இலங்கை அதிகாரிகளுடனேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். அரசியல்வாதிகளுடன் பெரியளவிலான பேச்சுவார்த்தைகள் எதுவும் நடத்தப்படாது." என அவர் கூறினார்.



அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றதை தொடர்ந்து, எத்தனை மாதங்களில் இலங்கைக்கு நிதி உதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கும்?

"சுமார் 6 மாதம் எடுக்கும். 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் தருவதாக ஒத்துக் கொண்டால் கூட, அதை பகுதி பகுதியாக பிரித்தே தருவார்கள். உண்மையை சொன்னால், சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படுகின்ற கடன் தொகையானது, இலங்கைக்கு எந்த வகையிலும் போதாது.

கிட்டத்தட்ட 60 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உள்ள ஒரு நாட்டிற்கு, 2.9 பில்லியன் அமெரிக்க டாலர் எப்படி போதும்?. அப்படி என்றால், ஏன் சர்வதேச நாணய நிதியத்திற்கு பின்னால் செல்ல வேண்டும். அதற்கான முக்கிய காரணம் என்னவென்றால், ஆரம்பகட்ட நடவடிக்கைகளை செய்துகொள்வதற்காக சிறிய எவிலான ஒரு தொகையை கொடுக்கும். கட்டமைப்பை மாற்றுவதற்காக சிறிய தொகையை கொடுக்கும்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றது, ஒப்பந்தம் வெற்றிகரமாக கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அது கடன் வழங்குபவர்களுக்கு அல்லது கடன் தரமிடும் நிறுவனங்கள் ஆகியோருக்கு நல்ல சமிக்ஞையை கொடுக்கும். கடன் மீள செலுத்த முடியாது என்ற விடயத்தை அந்த நிறுவனங்கள் திருத்தி அமைக்கும். கடனை மீள செலுத்த முடியாது என்ற பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்படும்.

அதன் பின்னர் மூலதன சந்தையில் இலங்கைக்கு கடன்களை வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். இது தான் இலங்கைக்கு கிடைக்கக்கூடிய மிக முக்கியமான நன்மையே தவிர, 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் எப்படியும் போதாது. இந்தியா அதைவிட பெரிய அளவு தொகையை கடனாக இலங்கைக்கு கொடுத்திருக்கின்றது" என பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

**"யானை பசிக்கு சோளப்பொரி"**

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரானது, யானை பசிக்கு சோளப்பொரி போன்றது என பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

எனினும், இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு, இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் நிதி உதவியை வழங்கும் பட்சத்தில், அது இலங்கைக்கு வேறு வழிகளில் உதவிகளை ஏற்படுத்தும் என அவர் கூறுகின்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடந்த காலங்களில் இலங்கை வாங்கிய கடனை, இன்றும் செலுத்தி வருவதாக பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

கடனை திருப்பி செலுத்தாத போதிலும், ஒரு நாடு கஷ்டத்தில் இருக்குமானால், சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்க முன்வரும் என அவர் கூறுகின்றார்.

இலங்கைக்கு கடந்த காலங்களில் நெருக்கடிகள் வரும் சந்தர்ப்பங்களில், 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளதாகவும், நெருக்கடியிலிருந்து சற்று மீள எழும் சந்தர்ப்பங்களில் அந்த நிகழ்ச்சி திட்டத்தை இடைநடுவிலேயே இலங்கை நிறுத்தி விடும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

சர்வதேச நாணய நிதியம், இந்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை, மூன்று அல்லது நான்கு தவணைகளாகவே வழங்கும் என அவர் கூறுகின்றார்.

அவ்வாறு இரண்டு அல்லது மூன்றாவது தவணைகளில் நாடு வழமைக்கு திரும்புமானால், அந்த நிகழ்ச்சி திட்டம் அதோடு நிறுத்தப்படும் என அவர் குறிப்பிடுகின்றார்.

எவ்வாறாயினும், அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்ட போதிலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழு அனுமதி பெறப்பட்டு, நிதி வசதி இலங்கைக்கு கிடைப்பதற்கு சுமார் 3 முதல் 6 மாத காலம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பிபிசி)

# ‘பட்ஜெட்’டும் மக்கள் கருத்தும்

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால பட்ஜெட் பற்றி இப்போது நாட்டில் பரவலாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரசியல் கட்சிகள் பல இந்த பட்ஜெட்டை பயனற்றது என கூறுகின்றன. ஆயினும் சிலர் இந்த பட்ஜெட் குறித்து பல ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அதிக செலவீனங்கள் இதில் குறைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த பட்ஜெட் மூலம் மக்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்கப் போகின்றன என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.

இந்த பட்ஜெட் குறித்து யாழ்ப்பாணத்தில் மக்கள் சிலர் முன்வைக்கும் கருத்துக்கள் இவை.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்



## வழமை போன்று பயனற்ற பாதீடு

**ச,உதயசிறீ, சமூக ஆர்வலர்**



ஒவ்வொரு காலத்திற்கு காலம் புதிய புதிய வரவு-செலவுத் திட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேறிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் திட்டங்கள் பொதுமக்களுக்கு எந்த அளவுக்கு சென்றடைகின்றது என்ற கேள்வி காணப்படுகின்றது.

தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் பொதுமக்களின் தேவையினை பூர்த்தி செய்யக்கூடியவாறான எந்த திட்டங்களும் முழுமையாக இடம்பெறவில்லை

அத்தோடு தற்போதைய நிலைமையானது மிகவும் கஷ்டமான நிமைமையாக காணப்படுகின்றது. தற்பொழுது பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதோடு தட்டுப்பாடும் காணப்படுகின்றது.

பொதுமக்களுக்கு இது பாரதூரமான ஒரு பொருளாதார அச்சுறுத்தலையையும் மனச்சிக்கலையும் வாழ்க்கைச் சிக்கலையும் ஏற்படுத்துகின்றது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை பொறுத்தவரை பொதுமக்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாத ஒரு பாதீடாகவே காணக்கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வறுமை நிலையிலும்- இந்த பொருளாதார நெருக்கடி நிலையிலும் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே எந்த அரசாங்கம் வந்தாலும் தமது கொள்கையிலிருந்து மாறமாட்டார்கள் என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கணிசமான திட்டமிடலின்மை மற்றும் தேவையற்ற அபிவிருத்திகள் ஊடாக பொதுமக்களுக்கு எந்த வித பயனளிக்காத ஒரு வரவு-செலவுத் திட்டமாக காணப்படுகின்றது.

வடக்கு மக்களுக்கு இந்த பாதீட்டின் மூலம் தமது இஸ்திரத்தன்மையினை நிலை நாட்டுவதற்காக சில சலுகைகள் வழங்கப்படுவதாக அரசியல் கட்சிகள் தெரிவிக்கின்றார்கள்.ஆனால் மக்களுக்காக கூறப்பட்டுள்ள திட்டங்கள் எத்தனை சதவீதம் பொதுமக்களை சென்றடையபோவது என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

## வரவேற்கக்கூடிய பட்ஜெட்



**குயிலன்
பிரபல வர்த்தகர்
யாழ்ப்பாணம்**

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசினால் சமர்ப்பிக்கப்பட் டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டமானது மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவமளித்து தேவையற்ற விடயங்களை தவிர்த்து தற்போது உள்ள பொருளாதார நெருக்கடி நிலையினை கருத்திற்கொண்டு நாட்டில் பொருளாதர நிலையில் மேம்படுத்துவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுதிட்டங்களைப் போல் அல்லாது தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டமானது மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது. அதாவது வறுமைக் கோட்டுக் குட்பட்ட மக்களின் பொருளாதார நிலையினை மேம் படுத்துவதற்காகவும் அத்தோடு தேவையற்ற செலவுகள் மற்றும் தேவையற்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படாது தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைக்கேற்றவாறு பொதுமக்கள் தமது அன்றாட செயற்பாடுகளைதங்கு தடையின்றி மேற்கொள்ளக்கூடியவாறும் இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டம் அமையப்பெற்றுள்ளது

குறிப்பாக 60,000 வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் உதவிப்பணம் வழங்கல் போன்ற பல செயற்திட்டங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பெரிதும் பொதுமக்கள் நலன் சார்ந்த திட்டங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டங்கள் அரசாங்கத்தினால் நடை முறைப் படுத்தப்படுமிடத்து சாதாரண பொது மக்களின் பொருளாதார நிலை மேம்பட்டு தமது அன்றாட வாழ்க்கையினை கொண்டு செல்லக் கூடிய நிலை ஏற்படும்.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் ரணில் அரசாங்கத்தின் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளமை பெரிதும் வரவேற்கக் கூடிய விடயமாகும்.

எனினும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தையும் அரசாங்கம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படுமிடத்து நாட்டில் பொருளாதார நெருக்கடியினால் சிக்கித் தவிக்கும் சாதாரண பொது மக்கள் ஓரளவுக்கு தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியும்-என்றார்.

## ஏழைகளுக்கான பட்ஜெட் இது

**ச.குணரட்ணம், ஓய்வு பெற்ற பொறியியலாளர், யாழ்ப்பாணம்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் மிகவும் திறமையான வரவு செலவு திட்டமாக காணப்படுகின்றது.

குறிப்பாக ஏழைகள் கஷ்டப்பட்டவர்கள் விவசாயிகளுக்கு பிரயோசனமான பாதீடாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் இந்த நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது நாட்டில் எரிவாயு, எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த நிலைமையில் பிரதமராக பதவியேற்று துணிந்து வந்து பதவியை எடுத்து தற்போது நாட்டின் ஜனாதிபதியாகவும் ஆகியிருக்கின்றார்.

நிதி அமைச்சைக் கூட எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் பொறுப்பு எடுக்க முடியாத இக்கட்டான நிலையில் இப்போது நிதி அமைச்சையும் தானே பொறுப்பெடுத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்கக்கூடிய நல்ல இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினை தயாரித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்.

தொடர்ந்தும் அவருடைய ஆட்சியில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வாறு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கான நல்ல திட்டங்கள் வருகின்றனவோ அதேபோல தொடர்ச்சியாக அவருடைய ஆட்சிக் காலத்திலும் நல்ல நல்ல திட்டங்கள் வந்து மக்களுக்கு பயனுள்ளதாக அமைய உள்ளன.

அதேபோல் முன்னர் எரிபொருள், எரிவாயு பெறுவதற்கு பொதுமக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்த்து நோக்கி இருந்தார்கள். அதேபோல் விவசாயிகள் உரத்தினை பெறுவதற்கு பல இடர்பாடுகளை எதிர் நோக்கினார்கள்.

ஆனால் தற்பொழுது வரவு-செலவுத் திட்டத்தில் உர இறக்குமதிக்கு என தனி ஒரு நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு எமது நாட்டில் விவசாயத் துறையை மேம்படுத்தி நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முன்னுதாரணமான செயற்பாடாகும்.

குறிப்பாக எமது நாட்டில் உணவு பிரச்னை ஏற்பட்டமைக்கு காரணம் உர இறக்குமதியினை நிறுத்தியதே. தற்போதைய ஜனாதிபதி மக்கள் நலன் சார்ந்த திட்டங்களின் ஒரு அங்கமாக உர இறக்குமதிக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதியினை ஒதுக்கியதன் மூலம் எதிர்காலத்தில் எமது நாட்டில் உணவு பிரச்னை என்பது இல்லாதொழிக்கும் ஒரு செயற்பாடாக காணப்படுகின்றது.

எனவே தற்போது இந்த ரணில் விக்கிரமசிங்கவால் நிறைவேற்றப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டமானது மிகவும் நன்மை அளிப்பதாகவே உள்ளது. எதிர்காலத்தில் நாடு பொருளாதார ரீதியில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வரும் என்பது தற்பொழுது தெரியத் தொடங்கி இருக்கின்றது. இந்த நாட்டில் வாழுகின்ற குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களுக்கு இது ஒரு நன்மை பயக்கும் வரவு செலவு திட்டமாகவே காணப்படுகின்றது.

ஈழநாடு

# தமன்னாவின் அறிமுகம்



மலையாள நடிகர் திலீப் நடிகை கடத்தல் வழக்கில் சிறை தண்டனை அனுபவித்தார். அவர் சிறையில் இருந்தபோது நடித்த ராம்லீலா படம் 100 கோடி (இந்திய) ரூபாய் வசூலித்த படம் என்ற பெருமையைப் பெற்றது.

தற்போது மீண்டும் அருண் கோபிக்கு தனது படத்தை இயக்கும் வாய்ப்பை கொடுத்துள்ளார் திலீப். இது திலீப் 147ஆவது படமாக உரு வாக இருக்கிறது.

இந்த படத்தில், கதாநாயகியாக நடிக்கிறார் தமன்னா. மலையாள திரையுலகில் முதன்முதலாக அடியெடுத்து வைக்கிறார் நடிகை தமன்னா. தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் முன்னணி நடிகையாக வலம் வந்த தமன்னா, ஹிந்தியிலும்கூட படங்களில் நடித்துவிட்டார். ஆனால், அவர் திரையுலகுக்கு வந்து இத்தனை வருட காலத்தில் இப்போதுதான் மலையாள திரையுலகில் அடியெடுத்து வைத்துள்ளார்.

# ரஜினியுடன் இணையும் பிரபலம்

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 169 ஆவது படம் ஜெயிலர். இதில், கன்னட நடிகர் சிவராஜ் குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும், இந்த படத்தில் நடிகை ரம்யா கிருஷ்ணன், நடிகர்கள் யோகிபாபு, வசந்த் ரவி மற்றும் மலையாள நடிகர் விநாயகன் ஆகியோர் இணைந்துள்ளதை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்நிலையில், இந்தப் படத்தில் நடிகர் ஜெய் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் கூட்டணி



விஜய் - அட்லி கூட்டணி மீண்டும் அமையும் வாய்ப்புள்ளது. ஷாருக் கானை வைத்து அட்லி இயக்கும் இந்திப் படம் இழுத்துக் கொண்டே போகும் நிலையில், விஜய்க்காக கலவையான அட்டகாசமான கதை ஒன்றை தயார் செய்துள்ளாராம் அட்லி.

கடந்த வாரம் விஜயை நேரில் சந்தித்து முழுக் கதையையும் கூறியுள்ளார். "எனக்குன்னு கதை பண்ற ஒரே ஆள் நீதான்டா.." என விஜய் அவருக்கு சொன்ன வார்த்தைகளை வெகுமதியாக எல்லோரிடமும் சொல்லிச் சிலிர்க்கிறார் அட்லி.



# கீர்த்தியின் ஏர்ப்பு

தமிழ் திரையு லகில் 80களில் முன்னணி நடிகராக இருந்த அருண்பாண்டியனின் மகள் கீர்த்தி பாண்டியன். இவர், "தும்பா" படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர்.

கீர்த்தி பாண்டியன் தனது சமூக வலைத்தள பக்கத் தில் கவர்ச்சி புகைப்படங்களை அவ்வப்போது வெளியிட்டு வருவார். இதற்கு ரசிகர்கள் பல விருப்புகளைக் குவிப்பார்கள். இந்நிலையில் கீர்த்தி பாண்டியன் சேலையில் கவர்ச்சி காட் டும் புகைப்படத்தை தனது இணைய பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதற்கும் பலர் விருப்புகளை குவித்து வருகிறார்கள்.



# இணைந்தார் ரகுல்

'இந்தியன் 2' படப்பிடிப்பில் பிரபல நாயகி ரகுல் ப்ரீத் சிங் இணைந்துள்ளார். சங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் 'இந்தியன்-2' படப்பிடிப்பு, கடந்த 2019ஆம் ஆண்டு தொடங்கியது. லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தில் கமல்ஹாசனுடன் சித்தார்த், காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், பாபி சிம்ஹா, பிரியா பவானி சங்கர் உட்பட பலர் நடிக்கின்றனர்.

படத்துக்கு அநிருத் இசையமைக்கிறார். பல்வேறு காரணங்களால் இதன் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. இதன்படி இதன் படப்பிடிப்பு கடந்த 25ஆம் திகதி சென்னையில் தொடங்கியது. கமல்ஹாசன் அமெரிக்காவில் இருப்பதால் அவர் இல்லாத காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் இந்தப் படத்தின் ரகுல் பிரீத் சிங் இணைந்துள்ளார்.




# திரைவிமர்சனம்

**திரைப்படம் - கோப்ரா**
**இயக்கம் - அஜய் ஞானமுத்து**
**இசை - ஏ. ஆர். ரகுமான்**
**நடிப்பு - விக்ரம், ஸ்ரீநிதி ஷெட்டி, இர்பான் பதான்**

"டிமாண்டி காலனி, இமைக்கா நொடிகள்" என அடுத்தடுத்து இரண்டு வித்தியாசமான படங்களைக் கொடுத்த இயக்குநர் அஜய் ஞானமுத்துவின் அடுத்த படம், ஏ. ஆர். ரகுமான் இசை, விக்ரம் ஆகியோரின் பங்களிப்பால் இந்தப் படம் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

படத்தின் ஆரம்பத்தில் சில பல வெளிநாடுகளைக் காட்டி, ஸ்கொட்லாந்து நாட்டு இளவரசரை கொல்ல ஆபிரிக்க பாதிரியார் தோற்றத்தில் அறிமுகமாகிறார் படத்தின் கதாநாயகன் விக்ரம். அந்தக் கொலை எப்படி நடந்தது என்பதை சர்வதேச பொலிஸ் அதிகாரியான இர்பான் பதான் விசாரிக்க ஆரம்பிக்கிறார்.

கணித முறைப்படி நடத்தப்பட்ட அந்த இளவரசர் கொலையும், அதே முறையில் இந்தியாவில் ஒரிசா முதல்வர் ஒருவர் கொல்லப்பட்டதிலும் ஒற்றுமை இருக்கிறது என கல்லூரி மாணவி மீனாட்சி கோவிந்தராஜன் ஓர் ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரை எழுதுகிறார். அது பற்றிய தகவல் கிடைத்து இந்தியா வருகிறார் இர்பான் பதான்.

அதற்கடுத்து நடக்கும் சில கொலை சம்பவங்களை விக்ரம் செய்கிறார். விக்ரம் செய்யும் கொலைகளுக்கு பின்னணியில் சர்வதேச அளவில் பரவியுள்ள பெருநிறுவன முதலாளியான ரோஷன் மத்தியூ இருக்கிறார். இந்த சர்வதேச கொலையாளிகளை இர்பான் கண்டுபிடிக்கிறாரா, விக்ரம் அவரிடமிருந்து தப்பிக்கிறாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

விக்ரமின் நடிப்பு திறமையை நம்பி முழுமையாக களத்தில் இறங்கியிருக்கிறார் இயக்குநர். அவரின் நம்பிக்கையை விக்ரம் வீணாக்கவில்லை. விதவிதமான தோற்றங்களில் முழுப்படத்திலும் தனது நடிப்பால் பல காட்சிகளில் கைதட்டல் வாங்க வைக்கிறார். அதே சமயம் தன்னை நம்பி இந்தப் படத்தில் நடிக்க வந்த விக்ரமின் நம்பிக்கையை அஜய் ஞானமுத்து இன்னும் அதிகமாகக் காப்பாற்றி இருக்கலாம். மூன்று மணி நேரம் ஓடும் படத்தை இரண்டரை மணி நேரமாகச் சுருக்கி, சில காட்சிகளின் நீளத்தையும் குறைத்திருந்தால் பரபரப்பான ஒரு ஹொலிவூட் த்ரில்லர் படத்தைப் பார்த்த திருப்தி கிடைத்திருக்கும்.

ஆரம்பக் காட்சியிலேயே அடையாளம் தெரியாத அளவுக்கு அசத்தலாக அறிமுகமாகிறார் விக்ரம். அந்த அசத்தல் ஒவ்வொரு காட்சியிலும் ஆச்சரியத்துடன் நகர்கிறது. குறிப்பாக இடைவேளைக்குப் பின்னர் பொலிஸ் விசாரிக்கும் காட்சியில் விக்ரம், ஆனந்தராஜ் கூட்டணியின் நடிப்பு திரையரங்கு முழுவதையும் கரவொலி எழுப்ப வைக்கிறது.

"அந்நியன்" படத்தில் விக்ரம், பிரகாஷ் ராஜ் ஏட்டிக்குப் போட்டியாக நடித்த அந்தக் காட்சி போல இந்தக் காட்சியில் விக்ரம், ஆனந்தராஜ் ரசிக்க வைத்துள்ளார்கள். படத்தின் முக்கியமான இரண்டு வேடங்களில் விக்ரம் நடித்திருப்பது. இரண்டு விக்ரம் வந்த பிறகு காட்சிகளில் தெளிவில்லாத ஒரு குழப்பம் இருக்கிறது. அது உச்சக்காட்சி வரை நீடிக்கிறது. சாமானிய ரசிகர்களுக்கும் படத்தைப் புரியும் விதத்தில் கொடுக்க இயக்குநர் முயற்சித்திருக்க வேண்டும்.

விக்ரமை ஒரு தலையாகக் காதலிப்பவராக ஸ்ரீநிதி ஷெட்டி. வழக்கமான கதாநாயகிக்குரிய வேடம்தான். ஆராய்ச்சி மாணவியாக மீனாட்சி கோவிந்தராஜன் ஸ்ரீநிதியைவிட அதிகக் காட்சிகளில் வருகிறார். இளவயது விக்ரம் காதலியாக சில காட்சிகளில் வந்து போகிறார் மிருணாளினி ரவி. சர்வதேச பொலிஸ் அதிகாரியாக முன்னாள் கிரிக்கெட் வீரர் இர்பான் பதான், சிறப்பான அறிமுகம்.

அவருக்கு இது முதல் படம் என்று சொன்னால் ஆச்சரியம்தான். ஹிந்திப் படங்களிலும் அவருக்கு நடிக்க வாய்ப்புகள் வரலாம். பெருநிறுவன அதிபர்களை வில்லனாக இன்னும் எத்தனை படங்களில் காட்டுவார்களோ? மலையாள நடிகர் ரோஷன் மத்தியூ அந்த அதிபர் கதாபாத்திரத்தில் பெரிதாக ஜொலிக்கவில்லை.

படத்தின் உருவாக்கம் சிறப்பாக உள்ளது. ஒளிப்பதிவாளர் ஹரிஷ் கிருஷ்ணன், சண்டைப் பயிற்சியாளர் திலீப் சுப்பராயன் ஹொலிவூட் படங்களை கண்முன் கொண்டு வந்து காட்டியிருக்கிறார்கள். ஏ. ஆர். ரகுமான் இசை ஏமாற்றம். பாடல்களும், பின்னணி இசையும் சுமார் ரகம்தான். பின்னணி இசையை அவர்தான் அமைத்தாரா என்பது சந்தேகமாக உள்ளது.

கணிதம், அறிவியல், பலவித தோற்றங்கள், ஆள் மாறாட்டம், பெருநிறுவன அரசியல் என பல விஷயங்களை ஒரே படத்தில் சொல்லி அதிகமாகக் கொடுத்தது தான் குழப்பத்துக்குக் காரணம். அருண் விஜய் நடித்து வெளிவந்த "தடம்" படத்தின் கதையையும் கொஞ்சம் ஞாபகப்படுத்தி செல்கிறது. மேலே சொன்ன குறைகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் ஒரு வர்த்தகப் படமாக ரசிக்கலாம்.

# இலங்கையின் வென்ற இடமும்! பங்களாதேஷ் தோற்ற இடமும்!!




“ஆப்கானிஸ்தான் அணியுடன் ஒப்பிடுகையில் பங்களாதேஷ் உடனான போட்டி எங்களுக்கு எளிதாகவே இருக்கும். ஆப்கானிஸ்தான் அணி உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சைக் கொண்டுள்ளது. சகீப் அல்ஹசன் மற்றும் முஷ்தபிஹூரை தவிர பங்களாதேஷ் அணியில் அப்படி சொல்லிக் கொள்வதற்கு யாரும் இல்லை” - போட்டிக்கு முன்னதாக இலங்கை அணியின் தலைவர் சானக இவ்வாறு கூறினார்.

இதற்குப் பதிலளித்த பங்களாதேஷ் அணியின் பயிற்றுநர் கலேத் மஹ்மூத், ”சானக இத்தகைய கருத்தை ஏன் தெரிவித்தார் என்று தெரியவில்லை. எங்கள் அணியிலாவதுசகீப் அல்ஹசன் மற்றும் முஷ்தபிஹூர் உள்ளனர். அப்படி ஒருவர்கூட, அவர்கள் அணியில் இல்லை!” என்றார்.

இவ்வாறு களத்துக்கு வெளியிலேயே இப்போட்டிக்கான யுத்தம் ஆரம்பானது. இலங்கை பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இது போன்ற முட்டல் மோதல்கள் புதியதல்ல.

போட்டிக்கு முன்னர் இரு அணியின் தரப்பில் இருந்து வந்த வார்த்தைகள் குறித்து பங்களாதேஷ் அணித் தலைவரிடம் சகீப்பிடம் கேட்ட போது, “ஊடகங்கள் முன் நடக்கும் விசயங்கள் பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை. அவை எங்கள் அணிக்குள்ளும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை” என்றார்.

மேலும், சுப்பர் 4 சுற்றுக்கான அணியைத் தீர்மானிக்கப்போகும் போட்டியாக வியாழக்கிழமை போட்டி அமைந்ததால் இப்போட்டி குறித்தான எதிர்பார்ப்பு சற்று அதிகமாகவே இருந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்ய, 183 ஓட்டங்களை அடித்தது பங்களாதேஷ்.

நமது இலங்கை அணி வெறும் 10 ஓட்டங்களை மட்டுமே உதிரிகளாக அளித்திருந்தது. முறையற்ற பந்து, அகலப்பந்து என எதையும் வீசியிருக்கவில்லை. ஆனால், அதே கவனத்தை களத்தடுப்பில் கடைபிடித்திருக்கவில்லை.

பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் தொடர்ந்து ஸ்கூப் மற்றும் ராம்ப் ரொட்களை ஆடி “தேர்ட்மன்” திசையில் பௌண்ட்ரிகள் அடித்துக் கொண்டிருந்தனர். இதற்கேற்ற களத் தடுப்பை கடைசியில்தான் மாற்றி அமைத்தார் சானக. அதை முன்பே செய்திருந்தால் செய்திருந்தால் 20 ஓட்டங்கள் வரை குறைந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும். மேலும் ஆறாவது பந்துவீச்சாளரை இலங்கை கடைசி வரை உபயோகிக்கவே இல்லை.

மறுபுறம் 8 அகலப் பந்துகள், 4 முறையற்ற பந்துகள் என 17 ஓட்டங்களை உதிரிகளாக வழங்கி சில பிடியெடுப்புகளை தவறவிட்டிருந்தனர் பங்களாதேஷ் அணியினர். சிறப்பாகப் பந்து வீசிக் கொண்டிருந்த மெஹதி ஹசனும் இரண்டு முறையற்ற பந்துகளை வீசினார். அதில் குசல் மெண்டிஸ் ஆட்டமிழந்த பந்து முறையற்றதாக மாறியது ஆட்டத்தின் மிக முக்கியமான திருப்புமுனை.

ஆரம்பத்தில் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட்களை எடுத்த எபொட் ஹூசைன் இறுதி கட்டத்தில் முறையற்ற பந்துகள், அகலப்பந்துகள் என ஓட்டங்களை அதிகமாகக் கொடுத்தார்.

இதனாலேயே பங்களாதேஷ் அணியின் கைக்குள் பலமுறை வந்த போட்டி மீண்டும் இலங்கை அணிக்கே சென்றது. கடைசி இரண்டு ஓவர்களுக்கு 25 ஓட்டங்கள் தேவைப்பட, 19ஆவது ஓவரில் ஒரு முறையற்ற பந்துடன் சேர்த்து 17 ஓட்டங்களை வழங்கியது அந்த அணி. இதனால் இறுதி ஓவரில் 8 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டன. அதிலும் முறையற்ற பந்துகளை வீச 3 பந்துகள் மீதமிருக்க, 2 விக்கெட் வித்தியாசத்தில் போட்டியை வென்றது இலங்கை.

“உலகக் கிண்ணத்தில் நாங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால் இன்னும் பல இடங்களில் முன்னேற வேண்டும். சிறப்பான பயிற்சியின் மூலம் அதனை நாங்கள் அடைய முடியும்” என்று போட்டி முடிந்து கூறினார் சானக.





# உலகக் கிண்ணத்தின் பின் விராட் கோலி?

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலி, இருபது - 20 உலகக் கோப்பை தொடருக்கு பின்னர் இருபது - 20 ஆட்டங்களில் விளையாடுவாரா என கேள்விகள் எழுந்துள்ளன.

துடுப்பாட்டத்தில் உலக அரங்கில் கோலோச்சிய விராட் கோலி கடந்த 3 வருடங்களாக தடுமாற்றம் கண்டுவருகிறார். அதிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இருபது - 20 கிரிக்கெட்டில் விராட் கோலியின் துடுப்பு வீச்சு அணுகுமுறை நவீன காலத்துக்கு தகுந்த அளவில் இல்லை என்ற கருத்து எழத்தொடங்கியுள்ளது. இருபது - 20 வடிவில் விராட் கோலி 20 அல்லது 35 ஓட்டங்கள் சேர்க்கிறார். ஆனால், அவரின் ஸ்டிரைக் ரேட் பெரிய அளவில் இல்லை என்பதே தற்போது பேசுபொருளாக உள்ளது.

இந்த கருத்து கடந்த ஆண்டு இருபது - 20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறாமல் வெளியேறியதில் இருந்து எழத்தொடங்கி விட்டதாகவே கருதப்படுகிறது. இந்த ஆட்டம்தான் விராட் கோலி அணித் தலைவராக செயல்பட்ட கடைசி இருபது - 20 தொடர். பணிச் சுமையை குறைக்க வேண்டும் என கருதிய விராட் கோலி இருபது - 20 வடிவில் மட்டும் அணித் தலைமைப் பதவியை துறந்தார். விராட் கோலியின் முடிவு எந்த பலனையும் கொடுக்கவில்லை. தொடர்ந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அணித் தலைமைப் பதவி விராட் கோலியிடம் இருந்து பறிக்கப்பட்டது. இதன் பின்னர் டெஸ்ட் அணியின் தலைமைப் பதவியில் இருந்து விராட் கோலியே விலகினார். இதன்பின்னர் விளையாடிய ஆட்டங்களிலும் தான் சந்தித்த மன அழுத்த பிரச்னைகள் குறித்தும் சமீபத்தில் விராட் கோலி பகிர்ந்துகொண்டார்.




33 வயதில் விராட் கோலி 464 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளது பெரிய விசயமாக பார்க்கப்படுகிறது. இருப்பினும் விராட் கோலி இந்த ஆண்டில் சர்வதேச இருபது - 20இல் கடைசியாக விளையாடிய 5 போட்டிகளில் முறையே 17, 52, 1, 11, 35 ஓட்டங்களே சேர்த்துள்ளார்.

இதில் 17 ஓட்டங்களை 13 பந்துகளிலும், 52 ஓட்டங்களை 41 பந்துகளிலும், 35 ஓட்டங்களை 34 பந்துகளிலும் எடுத்துள்ளார். இந்திய அணிக்கு தற்போது தேவைப்படுவது ஒவ்வொரு ஆட்டத்திலும் அரைச் சதங்கள் அல்ல, ஆனால் 20 பந்துகளில் 35 ஓட்டங்கள், 10 பந்துகளில் 20 ஓட்டங்கள் எடுப்பது அவசியமாகி உள்ளது. புள்ளி விவரங்களின்படி வேகம் குறைந்து வீசப்படும் 6 முதல் 14 ஓவர்களில் விராட் கோலியின் ஸ்டிரைக் ரேட் 100கூட தாண்டவில்லை. இங்குதான் சறுக்கல் தொடங்குகிறது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் வரும் ஒக்ரோபரில் நடைபெறுகிறது. இதற்கு முன்னதாக இந்திய கிரிக்கெட் சபை தரப்பினரோ அல்லது இந்திய அணி நிர்வாகமோ விராட் கோலியிடம் பேசக்கூடும். ஒருவேளை தற்போது முடிவு எடுக்கப்படவில்லை என்றாலும் உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் இருபது - 20 வடிவம் குறித்து விராட் கோலி முக்கிய முடிவை எடுக்கக்கூடும். இதன் விளைவு இருபது - 20 போட்டிகளை தவிர்த்து ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டிகளில் விராட் கோலி கூடுதல் கவனம் செலுத்துவதாக அமையலாம். ஏனெனில், அடுத்த 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெறுகிறது. மேலும் அடுத்த 5 வருட காலத்தில் இந்தியஅணி 38 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

## கனடாவில் நடைபெற்ற

# நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்

குரு அரவிந்தன்




கனடாவில் இயங்கி வரும் நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களின் ஒன்றுகூடல் ரொறன்ரோவில் உள்ள மிலிக்கன் பூங்காவில் சென்ற சனிக்கிழமை 27-8-2022 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நீண்ட நாட்களின் பின் வெவ்வேறு காலகட்டங்களில் படித்த சங்க அங்கத்தவர்கள் ஒன்றாகச் சந்தித்து உரையாடவும் முடிந்தது. காலை உணவைத் தொடர்ந்து, வருடாந்த பொதுக்கூட்டம் காலை 11:00 மணியளவில் நடைபெற்றது. அங்கத்தவர்களின் கலந்துரையாடலைத் தொடர்ந்து மதியஉணவும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.




காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரி 120 வருடங்களை நிறைவு செய்ததை 2021 ஆண்டு கொண்டாடும் முகமாக நினைவுக் கோப்பைகளும், நினைவு ரீசேட்களும் பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டாலும், கோவிட் - 19 காரணமாக அவற்றை வழங்க முடியாமல் இருந்தது. இந்த ஒன்றுகூடலின்போது, சிறப்பு விருந்தினருக்கும், நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் அவற்றை வழங்கியதன் மூலம் அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க பாடசாலைகளை ஆரம்பித்து மதமாற்றங்களை மேற்கொள்ள முற்பட்ட போது, இந்துமத நம்பிக்கை கொண்டவர்கள் நடேஸ்வரா, பரமேஸ்வரா, வைத்தீஸ்வரா, இந்துக்கல்லூரி, மகாஜனா போன்ற தனியார் பாடசாலைகளை இந்து மாணவர்களுக்காக அப்போது ஆரம்பித்தது நினைவிருக்கலாம்.

“பொலியும் ஆழி வளங்கள் யாவும்
நிறை காங்கேசந்துறை யிலே
பொறையில் ‘நேர்மை நெறிநில்’ நீதி
அறிவை ஊட்டும் முறையிலே
கலை நலங்கள் எழில் பெறும்
நடேஸ்வரா கல்லூரியில்’

என்று சுப் பையா ஆசிரி யர் இயற்றிய கல்லூரிக்கீதத் தில் குறிப்பிட்டது போல, இப்போது இங்குள்ள வளங்கள் எல்லாவற்றையும் மாணவர்களுக்குப் பதிலாக இராணுவமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காங்கேசந்துறை பகுதி பிரகடனப் படுத்தப்பட்டதால், கல்லூரிவீதியில் இருந்த நடேஸ்வராக் கல்லூரி இயங்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

யுத்த சூழ்நிலைகாரணமாகப் காங்கேசந்துறை நடேஸ்வராக்கல்லூரி பல பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருந்தது. ஊர்மக்கள், அதிபர்கள், ஆசிரியர்களின் விடா முயற்சியால் மீண்டும் பழைய இடமான கல்லூரி வீதியில் கல்லூரி இயங்க ஆரம்பித்தது. புதிய கட்டிடம், விளையாட்டு மைதான கட்டிடம் போன்றவற்றை அமைப்பதற்குப் பழைய மாணவர் சங்கங்கள் பெரும் உதவியாக இருக்கின்றன.

மக்கள் இடம் பெயர்ந்ததாலும், கல்லூரிவீதியின் ஒருபகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாலும் வருகைதரும் மாணவர்கள் தொகை குறைவாகவே இருக்கின்றது. கல்லூரியின் கிழக்குப்பக்கத்தில் இருந்து வரும் மாணவர்கள் வடக்கு நோக்கிப் பருத்துறைவீதி வழியாக காங்கேசந்துறை சந்திவரை சென்று சுற்றுப் பாதையால்தான் கல்லூரிக்கு நடந்து வரவேண்டிய நிலை இப்போது இருக்கின்றது.

அதனால் வளர்ந்த பெண் பிள்ளைகளை அனுப்பப் பெற்றோர்கள் தயக்கம் காட்டுவதால், வசதி படைத்தவர்கள் வேறுபாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றார்கள். ஒன்றுபட்டுச் செயற்பட்டால் இந்த நிலையை விரைவில் மாற்றி பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கை இன்னும் காங்கேசந்துறை மக்களிடையே இருக்கின்றது.

## புலம்பெயர் மடல்

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**கே. தனுசன், மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:**
புலம்பெயர் குழுக்களுடன் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வெளிவருகின்றனவே, இது நல்ல ஆரம்பம் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

**வியுக்தியார்:**
பேச்சுக்கள் நடத்துவது நல்லதுதான். அதற்காக அவர் யாருடன் பேசுகின்றார் என்பதுதான் முக்கியமானது. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பேசுகிறோம் என்று கூறிக்கொண்டு இலங்கையில் உள்ள ஒரு தனிநபருடன் பேசினால் தீர்வு வந்துவிடும் என்று நினைக்கின்றீர்களா? அதுபோலத்தான் இவரும் சில தனிநபர்களுடன் பேசுகின்றாராம். அவர் சட்டத்துறையில் ஒரு கலாநிதிப்பட்டம் பெற்றவர் என்பதற்காக அவர் செய்கின்ற எல்லாமே புத்திசாலித்தனமாக இருக்கும் என்று நம்பிவிடக்கூடாது தனுசன்.

---

**கே. ராஜ்குமார் கோவில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:**
யாழ்ப்பாணத்தில் பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து போதைப்பொருளை நுகர்ந்துகொண்டிருந்த இரண்டு இளம்பெண்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்களே. இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.?

**வியுக்தியார்:**
இதைப்பற்றி அறிந்தபோது உங்களுக்கு எப்படி இருந்தது என்றல்லவா கேட்டிருக்க வேண்டும். அதைப்பற்றி நினைப்பதற்கு என்ன இருக்கின்றது?. சைக்கிளில் லைற் இல்லாமல் போனது, சைக்கிளில் கூட்டமாகப்போனது என்பன போன்ற வழக்குகளையே கண்டுவந்த அந்தக்கலத்து யாழ்ப்பாணத்தை இனி நாம் காணவே போவதில்லை என்பது மட்டுமே தெரிந்தது.

---

**யுனைட் றிஸ்வான், முல்லைத்தீவு.**

**கேள்வி:**
அரச நிறுவனங்கள் பல பாரிய நஷ்டத்தில் இயங்குவதாகவும் அவற்றை மூடிவிட்டால் அதனால் பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலையை இழக்கவேண்டிவரும் என்றும் கூறுகிறார்களே. அரச வேலை என்றால் பாதுகாப்பானது என்று நம்மவர்கள் நினைப்பதும் இப்போது தவறானதோ?

**வியுக்தியார்:**
வர்த்கம் செய்வது என்றால் அதில் லாபம் இருக்க வேண்டும். லாபம் இல்லாவிட்டாலும் நஷ்டம் என்றாலும் இல்லாமல் இருக்கவேண்டும். அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவது எதனால் என்று அண்மையில் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர துணிச்சலுடன் தெரிவித்திருந்தாரே.

அரசாங்க வேலை என்றால் சும்மா இருந்து கொண்டு சம்பளம் எடுக்கலாம் என்று நம்மவர்கள் கருதுவதால்தான் அந்த நிறுவனங்களே நஷ்டத்தில் இயங்குகின்றன. வேலையே செய்யாமல் இருந்து கொண்டு அதுவே பாதுகாப்பானது என்றும் நாம் நினைத்தால் எப்படி?

**இராச. புஸ்பகாந்த், பரந்தன், கிளிநொச்சி**

**கேள்வி:**
வடக்கு - கிழக்கு இணைந்ததாக இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்பட்டு அதனை உலக வங்கி அல்லது ஐ. எம். எவ். அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய நேரடி நெறிப்படுத்தலில் நிதிக்கையாளுகைகள் உருவாக்கப்பட வேண்டும் -என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளாரே. அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**
சுவீப் ரிக்கற் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு நணபர், தனக்கு இரண்டாவது பரிசு விழுந்தால் என்ன என்ன எல்லாம் செய்யலாம் என்று கற்பனை பண்ணிக்கொண்டிருந்தாராம். அப்போது அவரது நண்பர், கற்பனை பண்ணுவதுதான் பண்ணுகின்றாய், அதில் என்ன கஞ்சல்தனம். முதலாவது பரிசு விழுவதாகவே கற்பனை பண்ணலாமே என்றாராம். கற்பனை பண்ணுவதில் என் கஞ்சல்தனம் என்று நினைக்கின்றாரோ என்னவோ?

---

**ஆர். பிரதாப், சீலாமுனை, மட்டக்களப்பு**

**கேள்வி:**
ஒருவாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சம்மதித்து விட்டது. அது இன்னும்பலர் நமது நாட்டுக்கு கடன்கொடுக்க உதவும் என்றும் கூறப்படுகின்றது. ஒருவாறு நமது நாடு இனி நெருக்கடியிலிருந்து மீண்டுவிடும் என்ற நம்பிக்கை உங்களுக்கும் இருக்கின்றதா?

**வியுக்தியார்:**
நமது நாடு இப்படியொரு பொருளாதார நெருக்கடியை முதலில் சந்தித்ததும் நல்லதாகப் போய்விட்டது என்றுதான் இப்போது எண்ணத் தோன்றுகின்றது. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இப்போது பெறமுடிந்தது. இன்னும் சில நாட்களில் ஏராளமான நாடுகள் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கவிருக்கின்றன. அப்படியொரு நிலை வந்த பின்னர் சர்வதேச நாணய நிதியத்தை பிடிப்பதே பெரிய வேலையாகப் போயிருக்கும். ஐரோப்பிய நாடுகளே வீதி விளக்குகளை நிறுத்தவேண்டிய நிலைக்கு வந்திருக்கின்றன. நமது நாடு முதலிலேயே பிரச்சினையை சந்தித்ததாலோ என்னவோ தப்பிவிட்டதோ என்றே இப்போது எண்ணத் தோன்றுகின்றது.

# புகலிடத்து மனைவி!



வ.ந.கிரிதரன்

இரவு மணி பதினொன்றினை நெருங்கிக் கொண்டிருந்தது. யன்னலினூடி கட்டட முனிகள் தவமியற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஓட்டியற்ற ஓடமாகப் பிறை நிலவு. பலகணியில் அடைந்திருந்த புறாக்கள் சில அசைந்தன. அடுத்த அப்பார்ட்மென்ட் லிருந்த இதுவரை கத்திக் கத்தி யுத்தம் புரிந்து கொண்டிருந்த யமேய்க்கனும் அவனது வெள்ளைக் காதலியும் சற்று முன்னர் தான் சப்தமிழந்து ஓய்ந்து போனார்கள். மனோரஞ்சிதத்தின் நெஞ்சுப்புற்றிலிருந்து ஞாபகப் பாம்பு களெழுந்து படம்விரித்தாடின. முன்றிலில் சாய்வு நாற்காழியில் சாய்ந்திருக்கும் அப்பாவுடன் சேர்ந்து அவளும் விரிந்து கிடக்கும் விண்ணின் அழகில் மனதொன்றிக் கிடந்தபோதிலெவ்வளவு சந்தோசம்! நட்சத்திரங்கள் கொட்டிக் கிடக்கும் இரவு வான் அவளது நெஞ்சில் எப்பொழுதுமேயொரு வித புதிர் கலந்த பிரமிப்பினை ஏற்படுத்தி விடும். அண்ணாந்து பார்க்கும் போது விரிந்து கிடக்கும் வெளியின் ஒரு பகுதியாக அந்தரத்தில் மிதந்து இயங்கும் இன்னொரு சுடராகத் தன்னையுணர்வாள். அச்சமயங்களில் இளகிக் கிடக்கும் மனம்... நீண்ட பல வருடங்களிற்குப் பின்னால் வருகை தந்திருந்த நீண்ட வால் வெள்ளி பார்ப்பதற்காக அப்பாவுடன் ஒவ்வொரு நாள் அதிகாலையும் நேரத்துடன் எழுந்தது இப்பொழுதும் மனதினுள் பசுமையாகவிருக்கிறது.

“அப்பா! சரியான புத்தகப் பூச்சி. அப்பா! ஆறடி தாண்டிய ஆகிருதி. சிந்தனைக் கண்கள். குமிண் சிரிப்பு. நானறிய பார்த்து அப்பா வேலைக்கென்று வெளியே போனதில்லை. வேலைக்குப் போகாத அப்பா. எந்த நேரமும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கிரகாம் கிறீன், டால்ஸ்டாய், வூட் ஹவுஸ், கொன்ராட்,... ஆனந்த விகடன், கல்கி, கலைமகள்,...இதைத் தவிர வேறென்ன செய்தார்? அப்பாவிற்குக் கவலைகள் இருந்ததுண்டா? குடும்பம், குட்டியென்று...எல்லாமே அம்மாதான்.அதிகாலையெழும்பி, அடுக்களை அலுவல் முடித்து, பாடசாலை செல்லும் அம்மா போய்ப் பொழுதுபட வந்தால்.. அம்மா மீண்டும் அடுக்களைதான். அம்மா வரும்வரை அப்பா குட்டி போட்ட நாயாய் அலைவார். அப்பா ஏனப்படி யிருந்தார்? அம்மா அதுபற்றி அலட்டிக் கொண்டது கிடையாது. ஏன் அப்பாவும் தான்.

தூங்க மாட்டேனென்று மனம் இன்று அடம் பிடித்துக் கொண்டிருந்தது. அப்பாவின் நினைவுகள் அவள் நெஞ்சில் ஒருவித ஏக்கத்தினைப் பால்யகாலம் பற்றியதொரு ஏக்கத்தினை ஏற்படுத்தின. கவலைகளற்ற சிட்டுக் குருவிகளாகச் சிறகடித்துக் கொண்டிருந்த அந்த நாட்கள். எப்பொழுது நினைத்தாலும் நெஞ்சினை இளக்கி விடும் அந்த நாட்கள். அப்படியே அப்பா, அம்மாவின் அரவணைப்பில் இருந்த்கு விட்டிருக்கக் கூடாதா? வாழ்வு அமைதியாகச் சென்று கொண்டிருந்த அந்தப் பால்ய காலத்துக் கணங்களின் இனிமை எங்கே? தொலைபேசி மணி ஒலித்தது. சோபாவில் சாய்ந்திருந்த படி தொலைக்காட்சியில் போய்க் கொண்டிருந்த தொலைக்காட்சித் தொடரொன்றை பார்த்தபடி பழைய நினைவுகளில் நனவிடை தோய்ந்தபடியிருந்த மனோரஞ்சிதம் “யாராகவிருக்கும் இந்த நேரத்தில்“ என எண்ணியவாளாக எழுந்து சென்று தொலைபேசியினை எடுத்து “ஹலோ” என்றாள்.

“ஹலோ ரஞ்சிதமா? நான் சந்திரன் கதைக்கிறேன்”

மனோரஞ்சிதத்திற்கு சிறிது திகைப்பாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது. ராமச்சந்திரன். அவளது முன்னாள் கணவன்.

“என்ன சந்திரன் இந்த நேரத்திலை..”

“ரஞ்சிதம், எனக்கு நாளக்கு வேலையில்லை. நீரும் நாளைக்கு வேலைக்குப் போகவில்லையென்று கூறியிருந்தனீர். எங்காவது ரெஸ்றாண்டிற்குப் போய் ஆறுதலாகக் கதைக்கலாமென்று பட்டது. என்ன சொல்லுகிறீர்?”

மனோரஞ்சிதத்திற்கும் போனாலென்னவென்று பட்டது.

“அதுசரி சந்திரன், இந்த நேரத்தில் எந்த ரெஸ்ராண் டிற்குப் போகலாம்..எல்லாரும் கடையைப் பூட்டுகிற நேரத்திலை..”

”அந்தக் கவலையை விடும். எனக்குத் தெரிந்த சீனனுடைய ரெஸ்ராண்டொன்று டவுண் டவுனிலை யிருக்கு...சைனா டவுனிலை தான். அவன் விடிய விடிய திறந்திருப்பான்...அங்கு போகலாம்...என்ன சொல் லுறீர்?”

“எனக்கென்றால் சரி.. நீங்கள் இங்கு வந்து போக இன்னும் நேரம் சென்று விடுமே..”

“நான் உமது இடத்திற்குக் கிட்டத் தானிருந்து கதைக்கிறேன். இன்னும் பத்தே பத்து நிமிடங்களில் அங்கு வந்து விடுவேன். ரெடியாய் நில்லும்”

மனோரஞ்சிதம் அவன் வருவதற்குள் முகம் கழுவி தன்னைத் தயார் படுத்தத் தொடங்கினாள். “இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே காலந் தள்ளுவது. இன்னும் இழுத்துக் கொண்டே போகாமல் இன்றைக்கே பேசி இதற்கொரு முடிவு கட்டினாலென்ன?“ என்றொரு எண்ணமும் கூடவே எழுந்தது. அதே சமயம் ராமச் சந்திரனின் தன்னையே முதன்மைப் படுத்தி அவளை அடிக்கடி வருத்திய பழைய சம்பவங்களெல்லாம் ஞாபகத்திலெழுந்தன. எவ்வளவு தூரம் அவளை வார்த்தைகளாலேயே வாட்டியிருப்பான். எதற் கெடுத்தாலும் அவள் மேல் சந்தேகம். அவள் நேரம் கழித்து வரும் சமயங்களெல்லாம் அவளை வார்த்தை களால் எவ்வளவு தரம் வாட்டியிருப்பான்?

சில சமயங்களில் “தேவடியா“ என்று கூடத் திட்டியிருக்கிறான். அவற்றுடன் ஒப்பிடும் பொழுது இவ்விதம் பிரிந்து சந்தித்து வாழ்வது கூட ஒரு விதத்தில் நன்றாகத் தானே இருக்கிறது. இப்படியே இருந்து விட்டாலென்ன?“ பலவிதமான எண்ணங்கள் வளையமிடத் தன்னை அலங்கரிப்பதில் மனோரஞ்சிதம் ஈடுபட்டாள். ராமச்சந்திரன் கூறியமாதிரியே பத்து நிமிடங்களில் வந்து விட்டான். இருவரும் அவனது காரிலேயே டொராண்டோ நகரின் மத்தியி லமைந்திருந்த “சீனநகர்” நோக்கிப் பயணமானார்கள். அவன் கூறிய படியே அந்தச் சீன உணவகத்தினுணவு வகைகள் சுவையாகவேயிருந்தன. அவன் “பியர்“ எடுத்து அருந்தத் தொடங்கினான்.

“என்ன சந்திரன்! பியர் குடித்தாலெப்படி கார் ஓடுவதாம்” என்று மனோரஞ்சிதம் கேட்டாள்.

“ரஞ்சிதம்! இன்று நீர் தான் டிரைவர். இப்படியொரு சந்தர்ப்பம் இனி எப்பொழுது வருமோ?”

நீண்ட நேரமாக உரையாடியபடி சீனத்து வகை உணவினைச் சுவைக்கத் தொடங்கினார்கள்.

“ரஞ்சிதம், எனக்கென்றால் ஒரு யோசனை..”

“என்ன சந்திரன்..”

“நடந்தது நடந்து விட்டது. அவற்றைப் பழங்கன வாக மறந்து விட்டு ஏன் புது வாழ்க்கையை நாம் தொடங்கக் கூடாது?”

“அப்படியென்றால் ஏற்கனவே விட்ட பிழைகளை நாங்கள் இனியும் விடக் கூடாது. ஒருவரையொருவர் நன்கு புரிந்து மதித்து எந்தவிதச் சந்தேகமுமில்லாமல் வாழ்வதாகவிருந்தால் எனக்கு ஆட்சேபணையில்லை. எதற்கும் இன்னுமொரு நாள் அவகாசம் தாருங்கள். நான் உங்களிற்கு எனது முடிவைச் சொல்லுகிறேன். என்ன சொல்லுகிறீர்கள் சந்திரன்?”

அவனுக்கும் அது சரியென்று பட்டது. “ ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா?” அன்றிரவு அவர்கள் அவ்வுணவகத்திலிருந்து புறப்பட்ட பொழுது ராமச்சந்திரன் தன் நினைவிலேயே இல்லை. அளவிற்கதிகமான மகிழ்ச்சியில் அளவிற்கதிகமாக பியர் அருந்தி விட்டிருந்தான்.

“சந்திரன், இந்த நிலையில் உங்களைத் தனியே விட எனக்கு விருப்பமில்லை.. பேசாமல் என் அபார்ட்மென்றிலேயே இரவு தங்கி விடுங்கள்” என்று மனோரஞ்சிதமே கேட்ட பொழுது ராமச்சந்திரன் மகிழ்ச் சியுடன் சம்மதித்தான்.

ராமச்சந்திரன் சோபா பெட்டில் படுத்துக் கொள்ள மனோரஞ்சிதம் தனது அறையில் படுத்துக் கொண்டாள். மறு நாள் ராமச்சந்தி ரனிற்கு முடிவு கூறு வதாகக் கூறியதை எண்ணியள், அது பற்றிய எண்ணங்களில் மூழ்கியவளாகவளாக நெடுநேரம் தூக்கம் வராமல் விழித்திருந்த மனோரஞ்சிதத்தை இறுதியில் தூக்கம் தழுவிக் கொண்டது.

அதிகாலை மூன்று மணியிருக்கும். இன்னும் விடிந்திருக்கவில்லை. மனோரஞ்சிதத்திற்குத் தன் மேல் யாரோ படுத்திருப்பது போலொரு உணர்வு. மூச்சு முட்டியது. கனவேதாவதுதான் காண்கின்றோமோ என எண்ணியவளாக விழித்துக் கொண்டவளிற்குத் தூக்கி வாரிப் போட்டது. ராமச்சந்திரன் அவள் மேல் பரவியவனாக அவளைத் தழுவ முயன்று கொண்டிருந்தான்.

“என்ன சந்திரன்..உங்களிற்கென்ன பைத்தியமா...” என்று கத்தியவள் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள்.

அவன் இன்னும் வெறியில் தானிருந்தான். “என்னடி பத்தினி வேசமாய் போடுறாய்? நானென்ன வேறு ஆளா? உன் புருசன்டீ”

இவ்விதம் அவன் கூறவும் அவள் ஆத்திரம் அதிக ரித்தது. இதை அவள் எதிர்பார்க்கவேயில்லை. எவ்வளவு இலகுவாக இயல்பாக ஆணவத்துடன் கூறினான் அவன்?

இவன் திருந்தவே மாட்டானா?

இவளுக்கும் அவனுக்குமிடையிலுள்ள தொடர் பென்ன? ஒரு காலத்தில் அவனுக்கு அவள் மனைவி யாகவிருந்தாள். அவன் அவளுக்குக் கணவனாக விருந்தான். ஆனால் அது ஒரு காலத்தில். தற்காலத்தி லல்ல.

அந்த ஒரு காலத்துறவைக் காரணமாக வைத்து இன்னும் இவன் இவளை அடக்கலாமென்று இயல்பாகவே இவன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். வெளியில் இவன் எவ்வளவு கதைத்தாலும் இவனது ஆழ்மனதிலுள்ள எண்ணம் தான் இப்பொழுது இந்தப் போதையில் வெளிப்படுகிறது. என்ன மனுசனிவன்?

”சந்திரன்! நாங்கள் ஒரு காலத்தில் புருசன் மனைவியாக இருந்தவர்கள் தான். அது பழைய கதை. இப்பொழுது எங்களுக்கிடையில் உள்ள தொடர்பு வெறும் நண்பர்களிற்கிடையிலான தொடர்பு மட்டும் தான். நல்ல காலம் இப்பொழுதாவது உங்களுடைய சுயரூபம் தெரிந்ததே. நீர் மாறியிருப்பீரென்று நினைத்தேன். ஆனால் இன்னும் நீர் மாறவேயில்லை. நாய் வாலை நிமிர்த்த முடியுமா? ” மனோரஞ்சிதம் இவ்விதம் கத்தவும் ராமச்சந்திரன் சுயநிலைக்கு வந்தான். மனோரஞ்சிததை அவன் நன்கறிவான். இத்தகைய சமயங்களில் அவன் என்ன செய்ய வேண்டுமென் பதையும் உணர்வான்.

“ரஞ்சிதம்! என்னை மன்னிச்சுக் கொள்ளும். நான் செய்தது பிழைதான். அதுக்காக நீர் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள நான் தயார் தான். ஆண் பெண் உடல் உறவென்பது உடற் பசிக்கொரு தீனிதான். என்னுடைய நிலையை நினைச்சுப் பாரும். நான் நினைச்சிருந்தால் என் உடல் தேவைகளுக்காக இங்கு மிகவும் இலகுவாக இன்னொரு பெண்ணின் துணையை நாடியிருக்க முடியும்.

ஆனால் நான் செய்தேனா? நான் இங்கு என்னை நியாயப் படுத்த முனையவில்லை. நான் செய்தது சரியென்று கூறவில்லை. ஆனால் அதற்காக என் சுயரூபம் அது இதென்று கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் நான் நிச்சயமாக நீர் உணர்வீரென்று நினைக்கின்றேன். ஆனால் நாளைக்கு நீர் கூறப்போகின்ற பதிலுக்கு இந்தச் சம்பவமொரு காரணமாகவிருக்காதென்று நம்புகிறேன்”

இவ்விதம் கூறிய சந்திரன் படுக்கையிலிருந்தும் எழுந்து சட்டையை மாற்றியவனாகப் புறப்பட்டான். அவன் செல்வதையே பார்த்தபடி அமைதியாக மனோ ரஞ்சிதம் நின்றாள்.

# காலங்காலமாக தொடரும் “யாசீடி” மக்களின் அவலநிலை..

## நூற்றாண்டுகளாக வரலாற்றில் தொடரும் இனப்படுகொலை ..

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஈராக்கில் சிறுபான்மை இனமான யாசீடி மக்கள் (Yazidi) பல நூற்றாண்டுகளாக, அவர்கள் மீதான அகோரமான கொடுமைகளையும் பல இனப்படு கொலைகளையும் எதிர்கொண்டனர். காரணம் அவர்களின் மாறாத இன - மத நம்பிக்கைகள் தான்.

இன்று வரை, அவர்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் மரபுகளில் மாற்றத்திற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் தொடர்ந்து வலுவாக இருக்கிறார்கள் என்பதேயாகும். அதனாலேயே உலகில் விரைவாக அழிக்கப்படும் ஆதி இனமாகி உள்ளனர்.

இனப்படுகொலை ஓர் இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற் றுமை போன்ற காரணங்களால் கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது.

யாசீடி மக்கள் குர்தி மொழி பேசுகின்ற ஓர் இனக் குழுவினர் ஆவர். இவர்கள் சியா, சூபி இசுலாமியச் சமயங்களின் கூறுகளை உள்ளடக்கிய நாட்டுப்புற மர புகளுடன் கலந்த சமரச சமயத்தை பின்பற்றுகின்றனர். யாசீடி மக்கள் ஈராக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் சிறுபான்மை இனமாவர்.

உலகில் மொத்தம் 15 இலட்சம் யாசீடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும் பான்மையினர் வட ஈராக்கின் சிஞ்சார் மலைப் பகுதியிலும் அதைச்சுற்றியுள்ள நகரங்களி லும் வாழ்கின்றனர். யாசீடி இன மக்களில் ஈராக்கில் 850,000, ஜேருமனியில் 200,000, சிரியாவில் 50,000, ருஷ்சியாவில் 70,000, ஆர் மீனியாவில் 60,000, ஜோர் ஜீயாவில் 20,000 சுவீடனில் 7,000 பேர் வாழ்கின்றனர்.

**பல நூற்றாண்டு ஒடுக்குமுறை:**

யாசீடி மக்கள் இனரீதியாக இவர்கள் குர்துக்கள் ஆவர். இவர்கள் பெரும்பாலும் தொன்மைய அசிரியாவின் பகுதியாக விருந்த வடக்கு ஈராக்கின் நினேவெ மாநிலத்தில் நீண்ட காலமாக வாழ்ந்தனர்.

ஐரோப்பாவிற்கு, குறிப்பாக ஜெர்ம னிக்கு இவர்கள் குடி பெயர்ந்ததை அடுத்து ஆர்மீனியா, ஜோயார்சியா மற்றும் சிரியா நாடுகளில் இவர்களது மக்கள்தொகை 1990களிலிருந்து வெகுவாக குறைந்துள்ளது.

யாசீடி மக்களை “சாத்தானை வழிபடுவோர்” என பல நூற்றாண்டுகளாக ஈராக்கில் ஒடுக்கி வந்துள்ளனர். இத்தகைய ஒடுக்குதல் ஈராக்கில் முன்னர் சதாம் உசே னாலும் பின்னர் அடிப்படைவாத சுன்னி இசுலாம் புரட்சியாளர்களாலும் இன்னமும் தொடர்கின்றது.

**ஓட்டோமன் பேரரசின் படுகொலைகள்**

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஒட்டோமன் பேரர சின் போது யசீதிகளுக்கு எதிராக பலமுறை படுகொலை கள் நிகழ்த்தப்பட்டன.

19ம் நூற்றாண்டில் அவர்கள் ஒட்டோமான் மற் றும் உள்ளூர் இலக்குகளாக இருந்தனர். மத வன்முறை யின் கொடூரமான பிரச்சாரங்கள் தொடர்ந்தன. கொடு ரமான தாக்குதல்கள் காரணமாக, யாசிடிகள் தொலை தூர மலைப் பகுதிகளில் உள்ள கோட்டைகளில் தஞ்சம் குவிந் தனர். மேலும் இன - மதத் துன்புறுத்தலில் இருந்து அவர்கள் தப்பிக்க ஒரு வழியாக தற்கொலையும் செய்தனர்.

யாசீடி இனத்தவர்கள் மற் றவர்களால் கடுமையாக ஒடுக் கப்பட்டு படுகொலை செய்யப் பட்டாலும்கூட இந்த மக்கள் தங்கள் மத நம்பிக்கையை விட மறுக்கின்றனர். வேறு மதத் திற்கு மாறவும் மறுக்கின்றனர். இவர்கள் மதத்திற்கு மற்றவர் கள் மதம் மாறுவதையும் விரும்புவதில்லை, ஆதரிப்பது மில்லை. இந்த இனத்தவர்கள் பிறருடன் திருமண உறவும் கொள்வதில்லை. எனவே இவர்கள் அழிக்கப்பட்டால் இந்த இனம் கிளைப்பதற்கோ வளர்வதற்கோ வாய்பே இல்லை என்பது கவலைக்கு உரியதே.

**2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல்:**

ஈராக்கில் ஆகஸ்ட் 2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல் யாசிடி சமூகத்தின் மையப்பகுதியான சின்ஜார் மலையின் அடிவாரத்தில் தொடங்கியது. அவர்கள் யாசிடிகளை ஐஎஸ்ஐஎஸ் இன் அரசியல்-மத நிலையில் வரவேற்கப்படுவதில்லை.

2007இல் கூட அவர்கள் அதிகம் புழங்கும் பகுதி களில் குண்டுவைத்து 800க்கும் மேற்பட்ட யாசீடிக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் 2014 இல் ஐ. எஸ். இயக் கத்தினரால் இவர்களில் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தப்பியோடியவர்களில் சுமார் ஐம்பதாயிரம் பேர் வரை ஐ. எஸ். அமைப்பினரால் கொல்வதற்காக சுற்றி வளைக்கப்பட்டு பின் ஐ.நா தலையீட்டால் விடுவிக்கப்பட்டனர்.

## உலகில் விரைவாக அழிக்கப்படும் ஆதி இனம்!



ஈராக்கில் ஆகஸ்ட் 2014 சுன்னி கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகளின் வன்முறையிலிருந்து தப்ப, யாஸிடி இன மக்கள் தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரை விட்டு வெளியேறினர்.

ஆயிரக்கணக்கானோர் சிரியா எல்லைக்கருகே உள்ள சிஞ்சார் மலையின் வறண்ட முகடுகளில் தஞ்சம் புகுந்தனர். சிலர் நடந்தே சிரியா எல்லையைக் கடந்தி ருக்கின்றனர். தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரைப் பிடித்த, ஈராக்கின் கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகள் செய்யும் வன்முறையிலிருந்து தப்ப இடம் பெயர்ந்தனர்.

**சின்ஜார், கோச்சோ படுகொலைகள்:**

ஆகஸ்ட் 2014 இல் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) சிஞ்சர் மாவட்டத்தின் கிராமங்கள் மீது மிருகத்தனமான, திட்டமிட்ட தாக்குதலை நடத்தியது, இது யாசிடி மக்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டது. ஐஎஸ் அமைப்பினர் கோச்சோவில் பலத்த ஆயுதம் ஏந்தியவாறு கார்களிலும் லாரிகளி லும் வந்து யாசீடி கிராமங்களை கருப்புக் கொடிகளை அசைத்து சுற்றி வளைத்தனர்.

கிராமவாசிகள் தங்களிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் கைவிடுமாறும், கிராம மக்கள் தங்கள் வீடுகளில் இருக்குமாறும் கோரினார்.

கிராமத்தை இஸ்லாத்திற்கு மாற்ற வேண்டும் அல் லது மரணதண்டனையை எதிர்கொள்ள வேண்டும் என்பதே ஆரம்பக் கோரிக்கையாக இருந்தது.

இஸ்லாமிய மதத்திற்கு மாறாததற்காக ஐஎஸ்ஐஎஸ் ஆண்களை வற்புறுத்தினர். பின்னர் யாசீடி ஆண் களின் எல்லா உடைமைகளையும் மதிப்புமிக்க பொருட்களையும் அபகரித்தனர். பின்னர்யாசீடி ஆண்களை தனித்தனி இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களை தூக்கிலிட்டனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் வேறு தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவர்களுடைய நகைகள் மற்றும் மதிப்புமிக்க பொருட்களை பெரும் குவிய லில் சேர்த்து கொள்ளையிட்டனர். மிக கொடூரமாக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினர்13 வயது முதல் 16 வயது வரை யிலான திருமணமாகாத சிறுமிகளைத் தேர்ந்தெ டுத்து பிரித்தனர். எஞ்சியவர்கள் வேறொரு கிராமத் திற்குச் செல்ல திருமணமான பெண்கள் மற்றும் குழந்தைகள் அகதி முகாம்களில் தங்கி இருந்தனர்.

திருமணமாகாத இளம் பெண்களைத் ஐஎஸ் தேர்ந் தெடுத்து தங்களுடன் அழைத்துச் சென்றனர். இளம் பெண்கள் போராளிகளுக்கு விற்கப்பட்டார்கள். அத்து டன் பாலியல் தொழில் அடிமைத்தனத்திற்கு தள்ளப்பட் டார்கள். ஐஎஸ் அமைப்பினர் பல பெண்கள் வதைத்து, அடிக்கப்பட்டு பட்டினி கிடக்கப்பட்டார்கள்.

**யாசீடி விடுதலை அமைப்பு : கொங்ரா ஸ்டார்**

2005 இல் யாசீடி பெண் களால் நிறுவப்பட்ட Kongreya Star, அமைப்பா னது விடுதலைக்கு போரா டும் கூட்டமைப்பு ஆகும். தெற்கு குர்திஸ்தானின் (வடக்கு ஈராக்) சின்ஜார் நகரத்தில் ஐஎஸ்ஐஎஸ்-ன் கைகளில் யாசிடி சமூகம் பாதிக்கப்பட்ட இனப்படு கொலையின் ஆண்டு நிறை வைக் குறிக்கும் வகையில், வடகிழக்கு சிரிய கவுன்சி லான “கொங்ரா ஸ்டார்” ஒரு அறிக்கையை வெளி யிட்டது. துருக்கி அரசின் ஆதரவுடன் ஐஎஸ்ஐஎஸ் கூலிப்படையினர் குர்திஷ் மக்களை அழித் தொழிக்க முற்பட்டதாகக் குறிப்பிட் டுள்ள கொங்ரா ஸ்டார், ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கடத்தப்பட்டதாகவும், பலரை இன்னும் காணவில்லை என்றும், உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான யாசிடி சமூகத்தினர் படு கொலை செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

துருக்கி அரசின் ஒத்துழைப்பை உள்ளடக் கிய திட்டங்களின் கட்டமைப்பிற்குள் ஐஎஸ் ஐஎஸ் இன் உள்ளூார் மற்றும் சர்வதேச பங்காளி களின் ஆதரவுடன் யாசிடி சமூகத்தின் படு கொலை நிகழ்த்தப்பட்டது, என்று வடகிழக்கு சிரியாவில் உள்ள பெண்கள் அமைப்பின் அறிக்கையும் கூறுகிறது.

யாசிடிகளின் இருப்பு, வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அழிக்க முயன்ற படுகொலை யின் நிறைவையொட்டி, பாதிக்கப்பட்ட அனை வரையும் நினைவுகூர்ந்தது கொங்ரா ஸ்டார், இது அவர்களின் வரலாற்றில் பாரிய வெகுஜன படு கொலையாகும் என அறிவித்துள்ளது. அவர்கள் அனு பவித்த அனைத்து படுகொலைகளுக்கும் மத்தியிலும், யாசிடிகள் இன்னும் தங்கள் நிலத்தில் தங்கள் இருப்பு, கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையைத் தழுவுகிறார்கள், என குறிப்பிடப்பட்டுள்ளது.

**இனப்படுகொலை அங்கீகரிப்பு:**

யாசிதிகளின் கோங்க்ரா ஸ்டார் அமைப்பின் தன் னாட்சி நிர்வாகம் இனப்படுகொலையை அங்கீகரிக்கு மாறு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற் றும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பொருளாதார வாய்ப்பு மற்றும் மேம்பாடு, பெண் களுக்கான விழிப்புணர்வு மற்றும் தற்காப்பு ஆகியவற் றில் கவனம் செலுத்தும் பெண்கள் கட்டமைப்பை ஒழுங் கமைப்பதில் இந்த அமைப்பு கவனம் செலுத்துகிறது. ரோஜாவா மற்றும் சிரியா முழுவதும் பணிபுரியும் கொங்ரா ஸ்டார் முழு மத்திய கிழக்கிற்கும் ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். அத்துடன் முழு பிராந்தி யத்திலும் பெண்களின் விடுதலைப் புரட்சியை நன வாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**04.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**04.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோட்டாவுக்காக எம்.பி. பதவியை இராஜிநாமா செய்வதற்குத் தயார்!

## கூறுகின்றார் சீதா அரம்பேபொல

கொழும்பு, செப். 04

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வர விரும்பினால், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயார் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

ஆனால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியோ அல்லது வேறு எவருமோ இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பாராளுமன்றத்துக்கு வருவார் என்ற நம்பிக்கை இல்லை என்று கூறிய அவர், இதுவரை கட்சியில் அப்படியொரு கதை நடந்துள்ளது. அவர் பாராளுமன்றத்துக்கு வரும் பேச்சு சமூக ஊடகங்களால் வெளியிடப்பட்ட பொய்யாக இருக்க வேண்டும் - என்றார். (அ)

# நாடகமும் அரங்கியலும் இருநாள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப். 04

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 10ஆம்,11 ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'மறைநதி' ஊடக மைய மண்டபத்தில் ( மறைக்கல்வி நடுநிலைய வளாகம்) நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர் ,விவரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (அ)

# இறுதிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், செப். 04

அராலி விளையாட்டு பேரவையினரால் அமரர் ராசநாயகம் ஸ்ரீதரன் அவர்களின் நினைவாக மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளதாக அராலி விளையாட்டு பேரவையின் இணைப்பாளர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்,

குறித்த மென்பந்தாட்ட சுற்று போட்டியில் 28 அணிகள் பங்கேற்று அணிகளுக்கு இடையில் போட்டிகள் இடம் பெற்று சுற்று போட்டியின் இறுதிப் போட்டி இன்று அராலி சரஸ்வதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக அவர் கூறினார். (அ)

# இலங்கைக்கு உதவ ஆஸி. தயார்!

கொழும்பு, செப். 04

முடிந்தவரை அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை எட்டியதற்காக இலங்கைக்கு அவுஸ்திரேலியா பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான செயல்பாட்டில் இது வரவேற்கத்தக்க முதற் படி என அவுஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# சீனத் தூதர் தரும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வான்பரப்பில் பறந்த சீன உளவு ட்ரோன்களை விரட்டினார். “மோதலை உருவாக்க எதிர்தரப்பைத் தூண்டும் அளவுக்கு இல்லையென்றாலும், தற்காப்புக்காகச் சில நடவடிக்கைகளை தைவான் எடுக்காமல் இருக்காது” என்ற அவரது துணிகரமான அறிக்கைக்குப் பதிலளித்த சீன வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் ஜாவ் லிஜ்ஜன், “சீனப் பகுதியில் சீன ட்ரோன்கள் பறப்பதில் வியப்பென்ன?” என்று கிண்டலடித்துள்ளார்.

இதே ரீதியில்,, எதிர்காலத்தில், இலங்கையில் உள்ள சீனக் குடிமக்களையும் திட்டங்களையும் பாதுகாக்க அத்தீவில், சீனத் துருப்புகளைக் குவிப்பதில் வியப் பென்ன, தவறென்ன என க்வியும் ஷீயும் கேட்கலாம். அண்மையில் பாகிஸ்தானில் உள்ள சீனக் கட்டமைப்புகளையும் அதன் பணியாளர்களையும் பாதுகாக்க அங்கு சீன இராணுவ முகாம்கள் அமைக்க சீனா இஸ்லாமாபாத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் செய்திகள் வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ அதிபர் தேர்தலில் தோற்றபோது, அதற்கு இந்தியாவும் அதன் உளவு நிறுவனமான றோவும் தான் காரணம் என்று அவர் குற்றம் சாட்டிய போது, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தனது தென் அண்டை நாட்டைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர டில்லி தவறி விட்டதோ என்று வியக்கிறேன். ராஜபக்ஷ குற்றச்சாட்டு உண்மையாயிருக்கும் பட்சத்தில், அடுத்து வந்த ஆட்சியாளர்களை இந்தியாவும் இதே போல் இராணுவ முகாம்களை அமைக்க அழுத்தம் தந்திருக்கலாம். மாறாக, அதிபர் மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பீஜிங் கிற்குச் 'சொகுசு'ப் பயணங்களை மேற்கொண்டு, சீனாவின் வலையில் சிக்கியதைக் கண்டும் காணாமல் இருந்தது.

இந்தியா இழந்துகொண்டிருக்கும் இலங்கையின் மீதான செல்வாக்கை மீட்கமுடியும் என்று நான் இன்னும் நம்புகிறேன். அதன் 'க்வாட்' கூட்டாளிகள் அதற்கு உதவலாம், உதவாமலும் போகலாம். சீனாவின் விரி வாக்கத் திட்டத்துக்கு எதிராக இணைந்து செயல்படுவதுதான் இந்தக் கூட்டணியின் முக்கிய நோக்கமாக இருந்தாலும், அந்தந்த நாடுகளுக்குத் தனித்தனிப் பிரச்னைகள் உள்ளன. பாக் ஜலசந்தியில் அடுத்துவரும் வாரங்களில் நிகழக்கூடிய பதற்றங்கள், இந்தக் கூட்டணிக்கு ஒரு சோதனையாக அமையலாம். தமிழர்களின் ஆதரவு இந்தியாவிற்கு, குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள தொப்புள் கொடி உறவுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்.

# கனடாவில் முதலமைச்சர் போட்டியில் மதுரையில் பிறந்த அஞ்சலி அப்பாத்துரை



மொன்றியல், செப். 04

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் முதலமைச்சர் ரேஸில் இருக்கிறார் தமிழ்நாட்டில் பிறந்த அஞ்சலி அப்பாதுரை என்ற இளம்பெண்.

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதலமைச்சரான ஜான் ஹோர்கன் கட்சித் தலைவர் மற்றும் முதலமைச்சர் பதவிகளில் இருந்து விலக இருப்பதால், தேர்தல் நடைபெற உள்ளது. இதில், தமிழ்நாட்டின் மதுரையை பூர்வீகமாகக் கொண்ட 90’எஸ் கிட்டான அஞ்சலி அப்பாதுரை போட்டியிடவுள்ளார். இது கனடாவில் வசிக்கும் தமிழர்கள் மட்டுமல்லாது, உலகத் தமிழர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அரசியல் மட்டுமின்றி சுற்றுச்சூழல் ஆர்வலராகவும் அறியப்படும் அஞ்சலி அப்பாதுரை, இசை, சல்சா நடனம் ஆகியவற்றிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராம்.

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த 2017-ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் புதிய ஜனநாயக கட்சி (NDP) வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதலமைச்சராக ஜான் ஹோர்கன் என்பவர் பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், அவர் தொண்டை புற்றுநோய் பாதிப்பு காரணமாக கட்சியின் தலைமைப் பதவி மற்றும் முதலமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக சமீபத்தில் அறிவித்தார். அதன்படி, கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக உட்கட்சித் தேர்தல் நடைபெற உள்ளது.

வரும் நவம்பர் 13ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் தேதி வரை என்.டி.பி கட்சியில் உட்கட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. டிசெம்பர் 3ஆம் தேதி முடிவுகள் அறிவிக்கப்படும். என்.டி.பி கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் முதலமைச்சராகவும் பொறுப்பேற்பார். 2024ல் நடக்கும் தேர்தலிலும் அவரே முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவார்.

உட்கட்சி தேர்தலில் பிரிட்டிஷ் கொலம்பியா சட்டத்துறை அமைச்சரான டேவிட் எபி போட்டியிடுகிறார். அவரை எதிர்த்துத்தான் அஞ்சலி அப்பாதுரை போட்டியிடுகிறார். 1990ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மதுரையில் பிறந்த அஞ்சலி அப்பாதுரை, சிறுவயதில் தமிழ்நாட்டில் தான் வசித்துள்ளார். அஞ்சலிக்கு 6 வயது இருக்கும்போது அவரது பெற்றோர் கனடாவில் குடியேறியுள்ளனர்.

அஞ்சலி அப்பாதுரை, காலேஜ் ஆஃப் அட்லாண்டாவில் சர்வதேச அரசியல் மற்றும் பருநிலை கொள்கை பாடத்தில் பட்டம் முடித்தார். சுற்றுச்சூழலியலில் ஆர்வம் கொண்ட அஞ்சலி, ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச அரங்குகளில் பங்கேற்று பருவநிலை மாற்றம் குறித்து விழிப்புணர்வு உரையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சித் தலைமைப் பதவிக்கான தேர்தலில் நிற்கும் அஞ்சலி அப்பாதுரை கூறுகையில், ”நான் கனடாவில் குடியேறியவள். இந்த மண்ணை நேசிக்கிறேன். இது எனது தாய் வீடு. மனிதர்கள் எல்லோரும் சமம் என்று கருதுகிறேன். மக்களுக்கு சேவையாற்றுவதை கடமையாக கருதுகிறேன். மனித உரிமைகள், சுற்றுச்சூழலை காக்க போராடி வருகிறேன். முறையாக திட்டமிட்டு செயல்பட்டால் பருவநிலை மாறுபாட்டை தடுத்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும். அதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறேன்” எனத் தெரிவித்துள்ளார். (அ)

# 40 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, செப்.04

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 40 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது வைத்தியசாலையின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜே.விஜேசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமை காரணமாக வெளிநாட்டு தூதுவர்களிடமிருந்து மருந்து வகைககளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கையிருப்பிலுள்ள மருந்துகளைக் கொண்டு வைத்தியசாலை நடவடிக்கைகளை முடிந்தளவு முகாமைத்துவம் செய்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பல நாட்களாகவே, அதிகளவான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களையும் வெளிநாட்டு தூதுவர்களின் உதவியினால் பெறப்பட்டிருந்ததாகவும், தொடர்ந்தும் அவர்களின் உதவியை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடு முழுவதிலும் உள்ள சிறுவர் மற்றும் மகப்பேற்று வைத்தியசாலைகளில் திரிபோஷாவுக்கான தட்டுப்பாட்டு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை வரவேற்கும் ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, செப். 04

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு வரவேற்றுள்ளது.

பொது நிதி மேலாண்மை மற்றும் ஏற்றுமதி தொழில்கள் உட்பட பசுமைப் பொருளாதாரம் ஆகியவற்றில் தொடர்ந்து ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக கூறியுள்ளது.

இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கூட்டமைப்பின்...

விக்கிரமசிங்க ரெலோ குழுவினரிடம் உறுதியளித்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்றுக் காலை 11.30 மணியளவில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியுடன் ரெலோ தலைவர்கள் அவசர சந்திப்பை மேற்கொண்டனர். அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், கல்முனை வடக்கு பிரதேச செயலகம், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவசர பிரச்னைகள் ஆகிய விடயங்கள் முக்கியத்துவம் பெற்றன.

இச்சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரனம் எம்.பி. மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் இச் சந்திப்பு நடைபெற்றது.

முதலாவதாக குரல் அற்றோர் குரல் அமைப்பினரின் வேண்டுகோளை சுட்டிக்காட்டி அவர்களால் கையளிக்கப்பட்ட அரசியல் கைதிகள் விபரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. 24 கைதிகள் தண்டனை வழங்கப்பட்டு இருப்பதனாலே நேரடியாக ஜனாதிபதியின் உத்தரவில் விடுதலை செய்யப்பட முடியும் என்றும் கால தாமதம் இன்றி அவர்களை விடுவிக்குமாறும் கோரப்பட்டது.

மேலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 22 கைதிகள் ஜனாதிபதியின் விசேட மன்னிப்பினால் விடுதலை செய்ய முடியும். தண்டனை வழங்கிய பின்னர் தான் விடுதலை செய்ய முடியும் என்ற அரசியல் யாப்பு நிலைப்பாட்டை கருத்தில் கொள்வதாக இருந்தால் இனி வழக்கு தொடுத்து தீர்ப்புகள் வழங்கப்படுவது இவ்வரசியல் கைதிகளின் விடுதலையில் காலதாமதத்தையே ஏற்படுத்தும். அதே நேரம் நல்லாட்சி அரசின் காலத்தில் புனர்வாழ்வு அளிக்கும் முறைமையின் கீழ் கைதிகள் விடுதலை செய்யலாம் என்ற திட்டத்தை அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி நடைமுறைப்படுத்த முற்பட்டதும் நினைவு கூரப்பட்டது.

குரல் அற்றோர் குரல் அமைப்பினர் வேண்டுகோளின் அடிப்படையில் இவ்வரசியல் கைதிகளை விரைந்து விடுதலை செய்யும் பொறிமுறை, அது குறுகிய காலப் புனர் வாழ்வின் அடிப்படையாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தண்டனை வழங்கப்பட்ட 24 அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றவர்களுடைய விடுவிப்பு சம்பந்தமாக நீதி அமைச்சருடன் கலந்தாலோசித்து விரைவான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலதிகமாகத் தடுப்பில் உள்ள முப்பத்தி எட்டு அரசியல் கைதிகளுக்கு எதிராக எந்த குற்றங்களும் இல்லாததனால் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரையின் படி அவர்களை விடுவிக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் பற்றி பேசப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான தகவல்களை திரட்டுவதற்கு சர்வதேச மேற்பார்வை உடனான பொறிமுறையே அவசியம் என்பதை கூட்டமைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் அதையே வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கையற்ற நிலையில் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய பொறிமுறையே காணாமல் ஆக்கப் பட்டவர்களுகான நீதியை பெற்றுத் தரும் என தொடர்ந்தும் கோரி வருகிறோம். எனவே அதற்கு அரசாங்கம் இணங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

ஐ.நா அமர்வுகளுக்கு பின்னராக நீதி அமைச்சருடன் அதற்கான குழு ஒன்றை அமைத்து தமிழர் தரப்புடனும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மூன்றாவதாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துகின்ற வேலைத்திட்டத்தை இனிமேலும் பின் போடாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஏற்கனவே நல்லாட்சி காலத்தில் அதற்கான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அது நிறைவேற்றப் படாமல் போனது துரதிர்ஷ்ட வசமானது. ஒரு நிர்வாக ரீதியான தரம் உயர்த்தலுக்கு அரசியல் காரணங்களைக் காட்டிப் பின் போடுவது அந்த மக்களை துன்பத்தில் ஆழ்த்துவதாக அமையுமே தவிர எத்தரப்புக்கும் நன்மை பயக்காது என்று எடுத்துரைக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி விரைந்து அதை செயல்படுத்தி தருவதாக உறுதியளித்தார்.

நான்காவதாக எரிபொருள் தட்டுப்பாட்டினால் குறிப்பாக வடக்கு கிழக்கு மீனவர்கள், தொழில் செய்ய முடியாமல் படும் தொடர் துன்ப நிலையும் அவர்களுடைய பிரச்சினை உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு தாங்கள் முன்மொழிந்த சலுகைகளை வரவேற்கிறோம். அதேநேரம் விதைப்புக் காலம் ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில்,ஏற்கனவே உரங்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளினாலும் எரிபொருள் விலையேற்றத்தினாலும் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். தற்போது அவர்களுக்கான உரம் மற்றும் கிருமிநாசினிகள் என்பவை சரியான நேரத்திற்கு வழங்கப்படாதவிடத்து எதிர்வரும் போகத்தில் பாரிய சிக்கலை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இந்தப் போகத்தில் விவசாயம் பாதிக்கப்படுமாக இருந்தால் நாடு ஒட்டுமொத்தமாக உணவுப் பஞ்சத்தில் வீழ்ந்துவிடும். சர்வதேச தொண்டு நிறுவனங்களிடமாவது உதவிகளைப் பெற்று இந்த பிரச்னைக்கு அவசர முடிவு காண வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.

காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தல், இராணுவ பிரசன்னத்தை குறைத்தல் என்பவற்றை பிரஸ்தாபித்த பொழுது காணி கையகப் படுத்தல் உடனடியாக தடுத்து நிறுத்துவதாகவும் இராணுவ பிரசன்னத்தை பாதுகாப்புச் சபையின் ஊடாக கட்டங்கட்டமாக குறைக்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புகளின் தடைகளை நீக்குவதோடு, புலம்பெயர் முதலீட்டாளர்கள் சம்பந்தமான அரசியல் அதிகார ரீதியான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலமே அவர்களை நம்பிக்கை கொள்ள வைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் எல்லா விடயங்களுக்கும் அவசியமான மற்றும் அவசரமான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்-என்றுள்ளது. (அ)

## மீண்டும்...

கோட்டாபய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவுள்ளார் என்று வெளியான தகவல் தொடர்பில் அக்கட்சியின் தலைவரான மகிந்தவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது குறித்து மேலதிக கருத்துக்களை வெளியிட அவர் மறுப்புத் தெரிவித்தார்.

## நள்ளிரவு நாடு...

டங்களையடுத்து இலங்கையைவிட்டுத் தப்பியோடி ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்த நிலையில் வெளிநாடுகளில் தங்கியிருந்த கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன் தினம் நள்ளிரவு தாய்லாந்தில் இருந்து மீண்டும் நாடு திரும்பினார்.

கடந்த ஜூலை 9ஆம் திகதி போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டிருந்த நிலையில், அங்கிருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை 13ஆம் திகதி அதிகாலை இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் மாலைதீவு சென்றிருந்தார்.

ஜூலை 14 ஆம் திகதி மாலை மாலைதீவிலிருந்து சிங்கப்பூர் சென்றிருந்த அவர், அன்றிரவு ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

28 நாட்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்த கோட்டாபய, ஓகஸ்ட் 11ஆம் திகதி தாய்லாந்துக்குப் பயணமாகியிருந்தார்.

மூன்று வாரங்களாகத் தாய்லாந்தில் தங்கியிருந்த கோட்டாபயவின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்ததை அடுத்து அவர் மீண்டும் நாடு திரும்பினார். தாய்லாந்திலிருந்து சிங்கப்பூர் வழியாக அவர் நாட்டை வந்தடைந்தார்.

சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானமான எஸ்.யு 468 இல் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று நள்ளிரவு 11.48 மணியளவில் அவர் வந்து இறங்கினார்.

அரசியல்வாதிகள் சிலர் கோட்டாபயவை கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றனர்.

அதன் பின்னர் அவர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அரசால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தை சென்றடைந்தார்.

## இலங்கைக்காக...

அனைத்து கடன் வழங்கும் நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பற்றி கலந்துரையாட ஒன்று கூடுவது முக்கியம் என ஜப்பானிய நிதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறான நிலையில், சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சீனாவின் இந்த நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் சவால்கள் குறித்து சீனா உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா தம்மால் இயன்ற உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தநிலையில் முறையான தீர்வுகளுக்காக இலங்கையுடன் கலந்தாலோசிப்பதில் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சீனா ஆதரவளிப்பதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

## கோட்டாபய...

களிடம் அண்மையில் யோசனை முன் வைத்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த யோசனைக்கு அவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

கோட்டாபய இன்று செய்யவேண்டியது அமைதியான வாழ்க்கை வாழ்வதைத் தவிர அரசியலில் ஈடுபட்டு மீண்டும் தேவையற்ற பிரச்னைகளை உருவாக்காமல் இருக்கவேண்டும் என்று ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்ததாக மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபாயவை நேற்றுக் காலை வரவேற்க சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நாமல் ராஜபக்ஷ இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வரக்கூடாது என்பதே பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானோர் கருத்து தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், மனித உரிமை மீறல்களுக்காக கோட்டாபய மீது வழக்குத் தொடரக் காத்திருக்கின்ற நிலையில், அவர் பாராளுமன்ற உறுப்பினரானால் அந்த வழக்குகளில் இருந்தும், சில தனி நபர்களிடமிருந்தும் தப்பிக்கலாம் என்ற நோக்குடன் அவரைத் தேசியப்பட்டியல் ஊடாக அரசியலுக்குள் கொண்டுவர ‘மொட்டு’க் கட்சியினர் வியூகம் வகுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

இந்நிலையில் இலங்கை வந்துள்ள அவருக்கு ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசு பூரண பாதுகாப்பை வழங்கியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் புதிய பாதுகாப்பு பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய வகையில் இந்தப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (அ)

## கோட்டாவைப்...

திரும்பியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை அரசு வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கோட்டாபய மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பதா என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (அ)

## கோட்டாவுக்குத்...

தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன் தினம் நள்ளிரவு நாடு திரும்பினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

## பாணின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிறீமா நிறுவனத்தின் மா விலை உயர்த்தப்படவில்லை. எனவே பேக்கரி உரிமையாளர்கள் பாணின் விலையை அதிகரிக்கவேண்டிய தேவை இல்லை. அவ்வாறு யாழ். மாவட்டத்தில் பேக்கரி உரிமையாளர்கள் அதிக விலைக்கு பாணை விற்றால் அவர்களுக்கு ரிய சலுகைகள் இல்லாதுபோய்விடும். குறிப்பாக யாழ்.மாவட்டத்தை பொறுத்தமட்டில் பிறீமா நிறுவனத்தின் மா அனைத்து பேக்கரி உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. அது தொடர்ச்சியாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

கொழும்பில் பாணின் விலை உயர்த்தப்படுவதற்காக யாழ்ப்பாணத்தில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவையில்லை. 12,500 விற்கு பிறீமா நிறுவனத்தினரால் எமக்கு மா வழங்கப்படுகின்றது.

எனவே யாழ். மாவட்டத்தில் 200 ரூபாய்க்கு மேல் பாணின் விலையை அதிகரிக்க தேவையில்லை. அவ்வாறு யாராவது பாணின் விலையை அதிகரித்து விற்றால் அவர்களுக்குரிய எரிபொருள் மற்றும் எரிவாயு பெறுவதற்கான சலுகைகள் நீக்கப்படக்கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன.

அதிக விலைக்கு பாணினை விற்றால் எமக்கு மேல் உள்ள உயர் அதிகாரிகள், அரச அதிபர் உட்பட்வர்கள் அதனை கண்காணிப்பார்கள். கண்காணிக்கும் இடத்தில் எமக்குரிய சலுகைகள் நிறுத்தப்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன.

அதாவது பேக்கரி உரிமையாளர்கள் யாராவது மா தேவைப்படுவோர் எமது சங்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களுக்குரிய மாவைக் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் அதிக விலைக்கு பாணை விற்கவேண்டிய தேவை இல்லை-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அரச மருத்துவ அதிகாரிகள் சந்திப்பு!

கொழும்பு, செப். 04

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

தற்போது அதிகரித்துள்ள மருந்து பொருட்களின் விலை குறைக்கப்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வெளிநாட்டு கையிருப்பை அதிகரிப்பதற்கு வைத்தியர்களுக்கு விடுமுறை வழங்கி வெளிநாடுகளில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும் என கோரப்பட்டதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். (அ)



# சட்டவிரோத மரக்கடத்தலுக்கு பயன்பட்ட வாகனங்கள் சிக்கின!

முல்லைத்தீவு, செப். 04

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 17 ஆம் கட்டை தேக்கங்காட்டுப்பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோமான முறையில் தேக்கங் குற்றிகள் அறுக்கப்பட்டு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி அதிகாலை வேளை சட்டவிரோதமான முறையில் அறுக்கப்பட்ட தேக்கங்குற்றிகளை உழவு இயந்திரத்திலும் டிப்பரிலும் ஏற்றிக்கொண்டிருந்தவேளை தகவலறிந்த மாங்குளம் வனவளத்திணைக்களத்தினர் இராணுவத்தினரின் உதவியுடன் குறித்த பகுதிக்கு சென்றவேளை கடத்தல் காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது அறுக்கப்பட்ட தேக்கங்குற்றிகள் 65 மீட்கப்பட்டுள்ளதுடன் இதன் பெறுமதி அண்ணளவாக 10 இலம்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. உழவு இயந்திரமும் டிப்பர் வாகனமும் மாங்குளம் வனவளத் திணைக்கள அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணையில் வனவளத்திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர். (அ)

# துன்னாலையில் 4 நாட்களாக மோதல்!

யாழ்ப்பாணம், செப். 04

பருத்தித்துறை துன்னாலை மேற்கு பகுதியில் இரு கிராமங்களுக்கு இடையேயான மோதலில் 4 நாள்களாக நீடிக்கும் நிலையில் ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளன. இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 25 இற்கும் மேற்பட்டோர் தேடப்பட்டு வருகின்றனர் என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்கள், கற்கள் மற்றும் போத்தல்களினால் மோதல்கள் இடம்பெறுவதாக பொலிஸார் கூறினர்

சம்பவம் தொடர்பில் 7 முறைப்பாடுகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

"நான்கு நாள்களுக்கு முன்னர் இரண்டு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாற்றமடைந்தது. அது பின்னர் கிராமங்களுக்கு இடையிலான மோதலாக மாறியுள்ளது.

சம்பவத்தில் ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளன. சிலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் மோதல்கள் தொடர்கின்றன.

நேற்று மாலை வரை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பெயர் குறிப்பிடப்பட்ட 25 பேர் தேடப்பட்டு வருகின்றனர்.

நேற்று நண்பகல் 12.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை அடங்கியிருந்து மோதல் மீண்டும் இன்றிரவு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று பொலிஸார் கூறினர். (அ)

# கொரோனாவால் 4 பேர் மரணம்

கொழும்பு, செப். 04

இலங்கையில் மேலும் 4 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அர சாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கொவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,707 ஆகும். (அ)

# இலங்கைக்கு உதவுமாறு கோரிவருகிறது இந்தியா!

புதுடில்லி,செப்.4

இலங்கைக்கு உதவுமாறு இந்தியா வெளிப்படையாக பரிந்துரைத்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும் பணியாளர் நிலை உடன்படிக்கையை எட்டியுள்ளமை குறித்து கருத்து தெரிவித்த அவர், அது எப்படி முன்னேறுகிறது என்பதை இந்தியா அவதானிப்பதாக குறிப்பிட்டார்.

கடனாளிகளின் சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை, பிரச்னைகளுக்கு உள்ளான இலங்கை தேசத்திற்கு முக்கியமானவை என்று அவர் கூறினார்.

இந்தியா, இலங்கைக்கு 3.8 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கியுள்ளது.

இது பல்வேறு வடிவங்க ளில் இப்போது 4 பில்லியன்க ளாகி உள்ளது. தொடர்ந்தும் கடன் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படுகிறது என்று பாக்சி குறிப்பிட்டார்.

அண்மையில் பாகிஸ்தான் போர்க்கப்பல் ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்தமை தொடர்பில் கருத்து தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் செயற்பாடுகள் ஏற்பட்டால், அவற்றை இந்தியா உன்னிப்பாக அவதானித்து அதனை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்தார். (அ)





தொண்டைமானாராற்றில் முதலை!

# அடியவர்களை அவதானமாக நீராடுமாறு ஆலய அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 04

தொண்டைமானாற்றில் முதலைகள் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளமையால் தொண்டைமானாற்றில் நீராடுபவர்கள் அவதானமாக நீராடுமாறு சந்நிதியான் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற செல்வச் சன்னதி ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி வெகு விமர்சையாக இடம் பெற்று வரும் நிலையில் அதிகளவு பக்தர்கள் முருகப்பெருமானை தரிசிக்க நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தந்துள்ளனர். இந்நிலையில் செல்வச் சந்நிதி ஆலயத்தின் பின்புறம் உள்ள ஆற்றில் நீராடும் அடியவர்களை அவதானமாக நீராடுமாறு செல்வச் சந்நிதி ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆற்றில் முதலைகள் இருப்பது தொடர்பில் தகவல் வந்துள்ளதன் காரணமாக ஆற்றில் நீராடும்போது ஆழமான பகுதிகளுக்கு சென்று நீராட வேண்டாம் என முருகன் அடியவர்களை கேட்டு கொள்வதோடு ஆற்றில் போடப்பட்டுள்ள மிதப்பு எல்லைகளுக்கு உள்ளேயும் அதேபோல் மிக அவதானமாகவும் நின்று உதவிக்கு ஆட்களுடன் நின்று மேற்பார்வை செய்து நீராடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் மூன்று இடங்களில் சைக்கிள் திருடியவர்கள் நாராந்தனையில் கைது!

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் திருடப்பட்ட மூன்று சைக்கிள்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மத்திய பஸ் நிலையம், யாழ்.சின்னக்கடை, யாழ்.போதனா வைத்தியசாலை முன்றல் ஆகிய பகுதிகளில் திருடப்பட்ட சைக்கிள்களே மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது நடவடிக்கை நாரந்தனைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கைதானவர்கள் 37, 38 வயதுகளை உடையவர்கள் என்றும் அவர்கள் தற்போது யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மீட்கப்பட்ட சைக்கிள்களில் ஒன்று தொடர்பில் மட்டும் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் ஏனைய இரண்டு சைக்கிள்களை அடையாளம் காணுமாறு பொலிஸார் மக்களிடம் கோரியுள்ளனர்.



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

பகல்

1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : உதவும் கரங்கள்



5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்
07.00 மணி : SPOTLIGHT- சரா புவனேஸ்வரன்-இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர்
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :டான் பட்டிமன்றம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை -அருட்தந்தை சக்திவேல் அடிகளார்



**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சக்தி டிவி**

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு